*கவனிக்க*.- *2009.09.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1622 - 2009 ඔක්තෝබර් මස 02 වැනි සිකුරාදා - 2009.10.02**

*1622 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1606 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1608 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 1612 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | - |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2009, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2009 இன் இல. 290*

*டீ/ஆர்எவ்/824/என்வை/04/01.*

## இலங்கை கடற்படை - தொண்டர் கடற்படை

*அதியுத்தமராம் சனாபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல்*

*2008, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து கொமாண்டர் (சிபொ) ஆக.*

கொமதோர் (சிபொ) விபுல செனரத் ஜயசிங்க, யூஎஸ்பீ, இகப - என்ஆர்சீ, 0296

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, ஏப்பிறல் 06.

10-146

---

*2009 இன் இல. 291*

*டீ/ஆர்எவ்/824/என்வை/03/03.*

## இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை

*அதியுத்தமராம் சனாபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்*

*2008, யூலை 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக கப்ரின் (வ) ஆக.*

கொமாண்டர் (வ) தொலே வத்தகே மார்கஸ் பெரேரா, இகப - என்ஆர்எஸ் 0355
கொமாண்டர் (வ) சேனக்க ஜயவிலால், இகப - என்ஆர்எஸ் 0473
கொமாண்டர் (வ) தர்மபிரிய வஜேதுங்க, இகப - என்ஆர்எஸ் 0336
கொமாண்டர் (வ) விஜேமான்ன முதியன்சேலாகே நிமல் தர்மதிலக்க பண்டார, இகப - என்ஆர்எஸ் 0449
கொமாண்டர் (வ) அம்பே பிட்டியகே நிஷாந்த த சில்வா, இகப - என்ஆர்எஸ் 0355

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, மாச்சு 04.

10-148

---

*2009 இன் இல. 292*

*டீ/ஆர்எவ்/832/என்வை.*

## இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை

*மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கொமாண்டர் (மிஇப) ஆக

லெப்னன்ட் கொமாண்டர் (மிஇப) சமீபதா வடுகே நிஹால் குமுது சில்வா, என்ஆர்இசெட் 0915.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, யூன் 04.

10-150

---

*2009 இன் இல. 293*

*டீ/ஆர்எவ்/624/என்வை/01/08.*

## இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை

*அதியுத்தமராம் சனாபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல்*

2008, ஒற்றோபர் 18 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் கொமாண்டர் (கவீ) ஆக
லெப்டினனட் (கவீ) (தற்காலிக லெப்டினனட் கொமாண்டர் (கவீ)) ஜயசேக்கர ஆரச்சிகே திரஞ்ஜிவ அவன்திக்க, என்ஆர்பீ 0929, இகப

2009, சனவரி 26 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் கொமாண்டர் (வ) ஆக
லெப்டினனட் (வ) (தற்காலிக லெப்டினனட் கொமாண்டர் (வ)) ராஜபக்ஷ மானிக்குதம்பி இரேஷ அகில மெண்டிஸ், என்ஆர்எஸ் 120, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, மாச்சு 04.

10-147

*2009 இன் இல. 294*

*டீ/ஆர்எவ்/832/என்வை.*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

*மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, மே மாதம் 04 ஆந் திகதியிலிருந்து குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*லெப்டினன்ட் கொமாண்டர் ஆக*

*லெப்டினன்ட் கலா கோரலே கெதர சமன்சிரி ராஜபக்ஷ, என்ஆர்எக்ஸ் 1671, இகப*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2009, மே 25.*

*10-149*

*2009 இன் இல. 295*

*டீவீஎவ்/241/என்வை.*

**இலங்கை தொண்டர் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட உபசேவைக்கு மாற்றம் செய்தல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் இலங்கை கடற்படை தொண்டர் படையணியிலிருந்து 2008, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் தொண்டர் கடற்படை உபசேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*கப்ரின் (தொன்) விதாரனகே ஜயரத்ன, பீஎஸ்வீ, இதொகப - என்வீஎக்ஸ் 5035*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2008, நவெம்பர் 28.*

*10-213*

---

*2009 இன் இல. 296*

*டீவீஎவ்/172/ஆர்ஈசீர்/என்வை/02.*

**இலங்கை கடற்படை - தொண்டர் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற நியமனம்*

*2008, ஒற்றோபர் 07 ஆந் திகதியிலிருந்து இலங்கை தொண்டர் கடற்படையின் ஏவுநர் உத்தியோகத்தர் பதவிக்கு :-*

*கொமாண்டர் அப்புஹாமிகே ஹேரத்பண்டா, இதொகப - என்வீஎக்ஸ் 5071*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2008, நவெம்பர்.28.*

*10-212*

2009 இன் இல. 297

டீவீஎப்/194/என்வை.

## இலங்கை கடற்படை - தொண்டர் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனங்கள்

2008, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து உப லெப்டினன்ட் (தொண்டர்) ஆக.

இரிப்புகே பந்துல பிரணாந்து என்வீஎக்ஸ் 5451
அதிமலி கன்கானம்கே அத்துல என்வீஎக்ஸ் 5453
எதிரிசிங்க ஆரச்சிகே உதேனி ஓவன் பீரிஸ் என்வீஎக்ஸ் 5454
ஹெந்தஹேவா ஜகத் ரோஹன குமால் த சில்வா என்வீஎக்ஸ் 5455
லிந்தமுலகே திஸ்ஸ லியோ த சில்வா என்வீஎக்ஸ் 5450
உடுவகே தொன் அர்ல் பர்ணாட் அபேரத்ன என்வீஎக்ஸ் 5457
அஸஸத்தும கமகே கீர்த்திரத்ன ராஜபக்ஷ என்வீஎக்ஸ் 5458
மஹப்பு கன்கானம்கே சனத் திஸ்ஸ த அல்விஸ் என்வீஎக்ஸ் 5459
அதபத்து விஜேகோன் முதியன்சேலாகே திலக்கரத்ன என்வீஎக்ஸ் 5460
கொட்டகல்ஒமுவே கெதர ஹேரத் முதியன்சேலாகே சரத் என்வீஎக்ஸ் 5461
மாதொட்ட ராலலாகே நிஹால் ரஞ்சித் என்வீஎக்ஸ் 5462
வாஹலதந்திரிகே ஜயந்த புஷ்பகுமார என்வீஎக்ஸ் 5463
சிக்குபதகே சந்திரலால் அசோக்க பத்மசிரி என்வீஎக்ஸ் 5464
ஜகத் தொலகே நாநாயக்கார என்வீஎக்ஸ் 5465
ஹேரத் முதியன்சேலாகே ஹேரத் நவரத்ன பண்டா என்வீஎக்ஸ் 5466
ரத்நாயக்க முதியன்சேலாகே அனுர ரத்நாயக்க என்வீஎக்ஸ் 5467
ஏக்கநாயக்க முதியன்சேலாகே அபேசிங்க என்வீஎக்ஸ் 5468
திசாநாயக்க முதியன்சேலாகே சுமனசிறி பண்டார என்வீஎக்ஸ் 5469
அலவத்தேகம கோபிவத்தே கெதர சுனில் என்வீஎக்ஸ் 5470
அஹம்பொடி உபுல் பிரபாத் மெண்டிஸ் விஜேசிங்க என்வீஎக்ஸ் 5471
பிரியந்த எதிரிசிங்க என்வீஎக்ஸ் 5472
அகல கப்பூவத்தே கெதர சுனில் ரத்நாயக்க என்வீஎக்ஸ் 5473
லியனகொடகே தொன் தர்மரத்ன என்வீஎக்ஸ் 5474
வித்தாரண ஆரச்சி கன்கானம்கே மஹேந்திர பந்துசிறி என்வீஎக்ஸ் 5475
ரன்துனு வீரகே ஆரியசேன என்வீஎக்ஸ் 5476
வீரசேக்கர முதியன்சேலாகே அரியரத்ன என்வீஎக்ஸ் 5477

2008, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதியிலிருந்து உப லெப்டினன்ட் (தொண்டர்) ஆக

சுதுவா ஹேவாகே சாலிக குமார ஹேமசந்திர, என்வீஎக்ஸ் 5478

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2008, நவெம்பர்.28.

10-211

# அரசாங்க அறிவித்தல்கள்

## யாத்திரைக் கட்டளைச் சட்டம்

(175 ஆம் அத்தியாயமான) யாத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2009.09.14.

### ஒழுங்குவிதிகள்

01. இவ்வொழுங்குவிதிகள் பதுளை கதிர்காம தேவாலயத்தின் (வருடாந்த பெரகரா) உற்சவத்தின் ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படும்.

2. ''மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்'' என்பது பதுளை நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் எனப் பொருள்படுவதுடன் 4 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் அவரால் அதிகாரம் வழங்கப்பட்டவரான எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்.

3. பதுளை மாவட்டத்தின் பதுளை கதிர்காம தேவலயத்தின் (வருடாந்த பெரகராவின் பொருட்டு உருவாக்கப்பட்டு) யாத்திரிகைளுக்கு ஏற்புடையாதல் வேண்டும்.

4. மாவட்டச் செயலாளர் இவ் ஒழுங்குவிதியின் கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கும் தம் மீது உரிய முறையில் சுமத்தப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றுவதற்கும் அரசாங்க உத்தியோகத்தர் எவருக்கும் அதிகாரம் வழங்குவதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும்.

05. (1) வாடிப் பிரதேசத்திற்குள் அல்லது வாடிப் பிரதேசத்திற்கு வெளியே அல்லது வாடிப் பிரதேசத்திற்குள்ளே வாகனப் போக்குவரத்து அல்லது நடைக்காரர் போக்குவரத்தையும் ஒழுங்குபடுத்த மாவட்ட செயலாளர் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் 1 ஆவது பந்தியின் கீழ் தமக்களிக்கப் பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தலின் போது மாவட்டச் செயலாளரினால் எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு விடுக் கப்பட்டுள்ள எந்த அறிவுறுத்தல்களையும் அனுசரிக்கும் முகமாக அத்தகைய அலுவலரினால் விடுவிக்கப்பட்ட சட்ட முறையான கட்டளை எதனையும் ஆள் எவரும் மீறி நடத்தல் ஆகாது.

6. மாவட்டச் செயலாளரின் எழுத்திலான அனுமதியுடனின்றி ஆள் எவரும் கால்நடையையோ வேறேதும் மிருகத்தையோ வாடிப் பிரதேசத்தினுள் கொண்டு செல்லலாகாது. எவ்வாறாயினும் 7 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் வண்டிகளையும் மாடுகளையும் நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வண்டிகளையும் மாடுகளையும் செலுத்திச் செல்வது தொடர்பாக, இவ் ஒழுங்கு விதி ஏற்புடையதாகாது.

7. (1) வாடிப் பிரதேசத்தினுள் பின்வரும் இடங்களை ஒதுக்குவதற்கு அல்லது ஏற்பாடு செய்வதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடைய வராதல் வேண்டும் :-

(அ) பஸ்களையும் பிற மோட்டார் வாகனங்களையும் நிறுத்துவதற் கான இடங்கள் ;

(ஆ) வண்டிகளையும் மாடுகளையும் நிறுத்தி வைப்பதற்கான இடங்கள் ;

(இ) ஒவ்வொரு யாத்திரிகர் தொகுதிக்கும் இருப்பாட்சி செய்வதற்கான தனித்தனி இடங்கள் ;

(ஈ) சுகவீனமுறும் யாத்திரிகர்கள் தங்குவதற்கான இடங்கள் ;

(உ) பிச்சை மற்றும் தானம் கேட்பவருக்கான இடங்கள் ;

(ஊ) விற்பனைக்காக குறிப்பிட்ட வொரு பொருளை காட்சிக்கு வைப்பதற்கான இடங்கள் ;

(எ) பல்வேறுபட்ட காரியங்களுக்காக சாவடிகளை அமைப்பதற்கான இடங்கள் ;

(ஏ) கழுவுதல் நிமித்தம் யாத்திரிகர்கள் பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள் நீர் நிலைகள் மற்றும் அதுபோன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள் ;

(ஐ) நீராடும் நிமித்தம் யாத்திரிகர்கள் பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் அது போன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள் ;

(ஒ) நீர் அருந்துதல் நிமித்தம் நீரைப் பெற்றுக்கொள்வதற்காக யாத்திரிகர்கள் பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் அதுபோன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள் ;

(ஓ) மாவட்டச் செயலாளர் அவசியமானதெனக் கருதக்கூடிய வாறான ஏனைய நோக்கங்களுக்கான இடங்கள்.

(2) மாவட்டச் செயலாளர் அது அவசியமானதெனக் கருதும் பட்சத்தில் (1) ஆம் பந்தியீல் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக ஏதேனும் ஓர் இடத்தை அறிவிப்பு அல்லது பெயர் பலகை அல்லது காட்சிப்படுத்துவதன் மூலம் ஒதுக்கி வைக்கலாம்.

(3) பந்தி (1) இன் கீழ் ஏதேனும் நோக்கத்திற்காக மாவட்டச் செயலாளரினால் ஒதுக்கப்படுமிடத்து அல்லது வழங்கப்படுமிடத்து அவ்விடத்தினை குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் ஆள் எவரும் வாடிப் பிரதேசத்துள் அமைந்த வேறு ஏதேனும் இடத்தை அத்தகைய நோக்கத்திற்காகப் பயன் படுத்தலாகாது.

8. நோய்கள் பரவாமற் தடுக்கும் பொருட்டு வாடிப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் குளம், கிணறு, நீர்ச்சுனை அல்லது நீர்த்தேக்கம் என்பவற்றில் குளோரின் இடுவதற்கு, அல்லது ஏதாவதொரு குளத்தினை, கிணற்றை, நீர் நிலையை மூடிவிடுவதற்கு அவசியமென மாவட்டச் செயலாளர் அல்லது வைத்திய அதிகாரி கருதும்பட்சத்தில் அவ்வாறு செய்வதற்கு தத்துவமுடையவராதல் வேண்டும்.

9. (1) 7 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட இடமொன்றில் மாவட்டச் செயலாளரினால் அதன் சார்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்துடன் அன்றியும் அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய அன்றியும் ஆள் எவரும் வழங்கப்பட்டுள்ள வாடிப் பிரதேசத்துக்குள் எந்தவொரு நோக்கத்திற்காகவும் ஏதேனும் ஒரு சாவடியை அல்லது தற்காலிக அல்லது நிரந்தர கட்டடமொன்றினை அல்லது வேறு அமைவிடத்தை அமைத்தல் அல்லது தற்போதுள்ள கட்டிடமொன்றுக்கு அல்லது வேறு அமைவிடத்திற்கு புதிதாக பகுதியொன்றினை இணைத்தல் ஆகாது.

(2) ஒழுங்குவிதியின் 1 ஆவது பந்திக்கு முரணான வகையில் இத்தகைய சாவடியொன்றினை அல்லது தற்காலிக அல்லது நிரந்தரக் கட்டடமொன்றினை அல்லது வேறு அமைவிடமொன்றினை அமைத்தல் அல்லது தற்போதுள்ள கட்டிடத்திற்கு அல்லது அமைவிடத்திற்கு புதிதாக ஒரு பகுதியை சேர்த்தால் அந்நபருக்கு எழுத்து மூல அறிவித்தல் ஒன்றினை வழங்கிய பின் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் படி குறிப்பிட்ட காலப்பகுதியில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அத்தகைய சாவடியை அல்லது கட்டடத்தினை தற்போதுள்ள கட்டடத்திற்கு அல்லது அமைவிடத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்ட பகுதியை அப்புறப்படுத்துமாறு அல்லது அழிக்குமாறு மாவட்டச் செயலாளரினால் அந்நபருக்கு உத்தரவிடுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) இவ் ஒழுங்கு விதியின் 2 ஆம் பந்தியின் கீழ் அறிவித்தலொன்றினைப் பெற்றுக் கொண்ட நபர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள், அவ்வறிவித்தலில் உள்ள உத்தரவுகளுக்கமைய இணங்கியொழுகத் தவறும் பட்சத்தில் அல்லது அது பற்றிய சந்தேகம் எழும் பட்சத்தில், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அத்தகைய சாவடியினை அல்லது அமைவிடத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்ட பகுதியினை அப்புறப்படுத்துதல் அழித்தல் மாவட்ட செயலாளரினால்/ அரசாங்க அதிபரினால் சட்டமுறையாதல் வேண்டும் என்பதுடன் அதனை அப்புறப்படுத்தல் அல்லது உடைத்தல் என்பவற்றிற்குத் தேவையான கூலியாட்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் சகிதம் குறிப்பிட்ட இடத்திற்கு அல்லது நிலத்திற்கு மாவட்ட செயலாளர் உட்செல்லுதல், அப்புறப்படுத்தல் அல்லது அழித்தல் என்பவற்றிற்குத் தேவையான அனைத்து செயல்களுக்கும் அல்லது அதற்கு அவசியமாகக் கூடியவாறான நடவடிக்கைகளைச் செய்வதும் அல்லது செய்விப்பதும் சட்டமுறையாதல் வேண்டும்.

10. குறிப்பிட்ட மலசலகூடத்தில் அல்லது மலசலகூடத்திற்கு அண்மையில் அறிவித்தல் அல்லது பெயர்ப்பலகை ஒன்றின் மூலம் மாவட்டச் செயலாளரினால் யாத்திரிகைகளின் பாவனைக்காக ஒதுக்கப்பட்ட மலசலகூடத்தைத் தவிர வாடிப் பிரதேசத்துக்குள் ஆள் எவரும் மலசலம் கழித்தலாகாது.

11. வாடிப் பிரதேசத்திற்குள் குறிப்பிட்ட குளத்தில், கிணற்றில், நீர்த்தேக்கத்தில், நீரோடையில் உள்ள நீரை எவரேனும் அசுத்தப்படுத்தல் ஆகாது.

12. குப்பை கூழங்களைப் போடுவதற்காக மாவட்டச் செயலாளரி னால் வழங்கப்பட்டுள்ள இடம் அல்லது தொட்டி தவிர ஆள் எவரும் வாடிப் பிரதேசத்திற்குள் பொருட்கள் அல்லது குப்பை கூழங்கள் போடுதல் ஆகாது.

13. (1) வாடிப் பிரதேசத்திற்குள் யாத்திரிகர்களுக்கான அனைத்து உணவு, பானவகைகளை பகிர்ந்தளிப்பதற்கான ஒழுங்குமுறைகளை ஏற்படுத்துவதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) இவ் ஒழுங்கு விதியின் பந்தி (1) இன் கீழ் தனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரயோகத்தின் போது, மாட்டச் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய எந்தவொரு பொலிஸ் அதிகாரியினால் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழங்கப்படும் சட்ட முறையான கட்டளை எதனையும் ஆள் எவரும் மீறுதல் ஆகாது.

14. (1) வாடிப் பிரதேசத்திற்குள் விற்பனைக்கோ அல்லது வேறு வகையிலோ காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது வைக்கப்பட்டிருக்கும் உணவு அல்லது பானம், சுகாதாரம் அற்றது என அல்லது பாவனைக்கு உதவாதது என தென்படும் சந்தர்ப்பத்தில் மாவட்டச் செயலாளரினால் அல்லது வைத்திய அதிகாரியினால் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அத்தகைய உணவு அல்லது பானம் பாவனைக்கு உகந்தவையல்ல எனத் தெரியப்படுத்தலாம்.

(2) இவ் ஒழுங்கு விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் பாவனைக்கு உகந்தவையல்ல என தெரியப்படுத்தப்பட்டிருக்கும் உணவு அல்லது பானம் ஆள் எவரும் வாடிப் பிரதேசத்திற்குள் விற்பனை செய்தலாகாது.

(3) இவ் ஒழுங்கு விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் பாவனைக்கு உகந்தவையல்ல என தெரியப்படுத்தப்பட்டிருக்கும் ஏதேனும் உணவு அல்லது பானம் எந்தவொரு பொலிஸ் அதிகாரியினால் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கைப்பற்றப்பட்டு அழித்துவிடப்படுதல் சட்டமுறையாதல் வேண்டும்.

15. பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை மாவட்டச் செயலாளரினால் அதன் சார்பாக வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்துடனன்றியும் அத்தகைய உரிமத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குத லன்றியும் வாடிப் பிரதேசத்தினுள் 7 ஆம் பந்தி ஒழுங்குவிதியின் கீழ் அந்த நோக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட ஏதேனும் இடத்தில் ஆள் எவரும் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி, தானசாலை நிறுவுதலோ அல்லது நடத்துதலோ ஆகாது. ஒவ்வொரு உரிமமும் வைத்திய அதிகாரியின் அல்லது அத்தகைய மருத்துவ அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் விதிப்புரையின் மீது கட்டணம் எதுவுமின்றி விநியோகிக்கப்படல் வேண்டும்.

16. வாடிப் பிரதேசத்திற்குள் உள்ள சகல பாண்சாலைகளும், சிற்றுண்டிச்சாலைகள், உணவு தயாரிக்கும் இடங்கள், உணவு விடுதி மற்றும் தானசாலை மற்றும் அங்குள்ள அனைத்து தளபாடங்கள், உபகரணங்கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைக்கப்படுதல் வேண்டும்.

:

17. வாடிப் பிரதேசத்திற்குள் விற்பனைக்கோ அல்லது வேறு காரணத்திற்காகவோ காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது வைக்கப்பட்டிருக்கும் அனைத்து கேக் வகைகள், இனிப்பு பண்டங்கள், மற்றும் சமைத்த உணவு வகைகள் வைத்திய அதிகாரியினால் அல்லது பொது சுகாதாரப் பரிசோதகரால் திருப்திப்படும் வகையில் ஈக்கள் உட்புகாத வகையில் சரியான முறையில் கண்ணாடிக் காப்பகத்தினுள் வைக்கப்படுதல் வேண்டும்.

18. தேநீர், கோப்பி, பால் அல்லது ஏதாவது உணவு வகை அல்லது பானம் என்பவற்றின் கழிவுகளையோ, சமையல் செய்யும் போது எஞ்சும் கழிவுகளையோ, வேறு கழிவுப் பொருட்களையோ, தரையில் அல்லது நிலத்தில் எறிதல் ஆகாது. அத்தகைய கழிவுப் பொருட்கள் எல்லாம் 19 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான ஏதேனும் கொள்கலன் ஒன்றில் இடப்படுதல் வேண்டும். அத்துடன் கழிவுப் பொருட்கள் மீதியாகவிருக்கும் பால் அல்லது அகற்றப்படும் பொருட்கள் எவையேனும் வாடிப் பிரதேசத்தினுள் அல்லது அண்மையிலிருக்கும் நிலத்தில் வீசியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவ்விடத்தின் சொந்தக்காரரினால் அல்லது பிரதான குடியிருப் பாளரினால் அவ்விடத்தில் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி அல்லது தானசாலை என்பவற்றில் ஒன்றாக இருக்குமிடத்து உரிமம் பெற்றவர் மூலம் அத்தகைய தவறு நீடிப்பதைத் தடுப்பதற்கு உரிய விழிப்புக் கவனத்துடன் செயலாற்றினாரெனவும் எல்லா முற்காப்பும் எடுத்தாரெனவும் மற்றும் எண்பித்தாலன்றி இவ்வொழுங்கு விதியின் ஏற்பாடுகளை மீறியுள்ளார்களெனக் கருதப்படுதல் வேண்டும்.

19. வாடிப் பிரதேசத்திற்குள் ஏதேனும் வர்த்தக நோக்கத்திற் காகவோ வியாபார நோக்கத்திற்காகவோ பயன்படும் சகல பாண்சாலைகள், சிற்றுண்டிச்சாலைகள், அமைந்துள்ள அனைத்து உணவு தயாரிக்குமிடங்கள், உணவுச்சாலைகள், உணவு தானசாலைகள் என்பவற்றிலும் ஒவ்வொரு கட்டிடத்திலும் அல்லது மனையிலும் 112 கன மீற்றருக்குக் (4½ கன அடி) குறையாத கனமானமுள்ள மரத்தாலான அல்லது உலோகத்தாலான கழிவுத் தொட்டி ஒன்று வழங்கப்பட வேண்டியதோடு அந்தக் கழிவுத் தொட்டி அதில் கழிவுகளை போடும் அல்லது அதிலிருந்து கழிவுகளை அகற்றும்போது தவிர எந்நேரங்களிலும் மரத்தாலான அல்லது உலோகத்தாலான மூடியினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

20 (1) வாடிப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள 15 ஆவது, 16 ஆவது, 17 ஆவது, 18 ஆவது அல்லது 19 ஆவது ஒழுங்கு விதிகளை மீறும் வகையில் நிறுவப்பட்டுள்ளதாக அல்லது நடத்திச் செல்லப்படுவதாக மாவட்டச் செயலாளர் கருதும் ஏதேனும் ஒரு பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடம், உணவு சாலை அல்லது தானசாலை அல்லது வியாபார ஸ்தலம் ஒன்றை மூடிவிடுவதற்கும் அத்தகைய வளவு தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டிருந்தால் அந்த உரிமத்தை உடனடியாக இரத்துச் செய்வதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஒரு பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவுச்சாலை அல்லது தானசாலை அல்லது ஏதேனும் வியாபார நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள எவரேனும் ஒருவர் இவ்ஒழுங்கு விதியின் 1 ஆம் பந்தியின் கீழ் மாவட்டச் செயலாளரினால் ஆக்கப்படும் எந்தவொரு சட்டமுறையான கட்டளைக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

21. ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஆள் எவரேனுமொருவர் வாடிப் பிரதேசத்திற்குள் பிரவேசித்தல் ஆகாது.

22. (1) வாடிப் பிரதேசத்திற்குள் ஆள் எவரும் கொள்ளை நோய் பரவும் பொழுது மாவட்டச் செயலாளர் யாத்திரிகர்களை வாடிப் பிரதேசத்திலிருந்து உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடுவதற்கும் வெளியேறி செல்வதற்கான வழி, வாகன வகை முறைகள் என்பவற்றை விதந்துரைத்தலும் சட்டமுறையாதல் வேண்டும்.

(2) மாவட்டச் செயலாளரினால் இப்பிரிவின் 1 ஆவது பந்தியின் கீழ் ஆக்கப்படும் சட்டமுறையான கட்டளை எதையும் எவரும் மீறுதல் ஆகாது.

23. வாடிப் பிரதேசத்திற்குள் ஏதேனும் தொற்றுநோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்ட ஆள் எவரும் தொற்றுநோய்கள் அல்லது தொடுகை நோய் பீடித்துள்ளது பற்றி தெரிந்து கொண்டும் அவருடன் ஒன்றாக வசித்தால் ஆள் ஒவ்வொருவரும் அதனை வைத்திய அதிகாரிக்கு அல்லது பொதுச் சுகாதார அலுவலருக்கு அல்லது ஏதேனும் பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

24. வாடிப் பிரதேசத்தினுள் ஏதேனும் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி என்பவற்றில் பொறுப்பாளியாக உள்ள ஒருவர் விடயத்திற்கு ஏற்ப அந்தப் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி, தானசாலை எதுவாயினும் அதனுள் தொற்றுநோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்டிருப்பவரெனக் கருதப்படும் எந்த ஒருவருக்கும் வாடிப் பிரதேசத்திற்குள் பிரவேசிக்கவோ ஏதாவது பொருட்கள் அல்லது உணவு, பான வகைகள் விற்பதில், தயாரிப்பதில், விநியோகிப்பதில் பங்குபற்ற அனுமதித்தல் ஆகாது.

25. ஏதேனும் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவுச்சாலை அல்லது தானசாலை என்பவற்றின் உரிமம் பெற்றவர் அல்லது ஏதாவதொரு தங்குமிடத்தில் அல்லது யாத்திரிகளின் ஓய்வு விடுதியின் உரிமையாளர் அல்லது தலைமை வதிவாளரினால் இந்த இடங்களில் தொற்றுநோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்ட எவரும் இருப்பதாகக் காணும் பட்சத்தில் தொற்றுநோயினாலோ, தொழுநோயினாலோ பீடிக்கப்பட்டவரையும் விடயத்திற்கேற்ப சொல்லப்பட்ட பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு சாலையில் தானசாலையில் தங்குமிடம் யாத்திரிகர்களின் ஓய்வு விடுதி என்பவற்றில் எந்தளவு காலப்பகுதியாயினும் தங்கியிருப்பதற்கு அனுமதித்தல் ஆகாது. அத்தகைய ஏதேனும் வளவில் தொற்றுநோய் அல்லது தொழுநோய் கண்டுபிடிக்கப்படும்போது விடயத்திற்கேற்ப உரிமம் பெற்றவர் அல்லது உரிமையாளர் அல்லது பிரதான குடியிருப்பாளர் இந்த விடயத்தைப் பற்றி வைத்திய அதிகாரிக்கு அல்லது பொதுச் சுகாதாரப் பரீட்சகருக்கு அல்லது ஏதேனும் பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

26. 7 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் யாசகம் செய்தல் மற்றும் தானம் கொடுத்தல் என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு இடத்தில் பணமாகவோ வேறு வகையாகவோ ஆள் எவரும் வாடிப் பிரதேசத்துள் தானம் வழங்குதலோ விநியோகித்தலோ ஆகாது.

27. மாவட்டச் செயலாளரின் எழுத்துமூல அனுமதியின்றி ஆள் எவரும் வாடிப் பிரதேசத்திற்குள் வான வெடிகளைக் கொழுத்துதல் அல்லது தீ ஆயுதம் பயன்படுத்துதல் என்பவற்றை மேற்கொள்ளலாகாது.

28. 7 ஆவது ஒழுங்கு விதி அல்லது 10 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் ஏதாவது ஒரு இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ஏதாவது அறிவிப்பு அல்லது பெயர்ப்பலகை எந்தவொருவராலும் தகாத வகையில் மாற்றவோ அல்லது நீக்கவோ இயலாது.

29. மாவட்டச் செயலாளர் வைத்திய அதிகாரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது எவரேனுமொரு ஒரு பொலிஸ் அதிகாரியினால் பின்வருவனவற்றைச் செய்தல் சட்டமுறை ஆகுதல் வேண்டும்.

(அ) இம் முற்போந்த ஒழுங்கு விதிகள் எதனையும் நடைமுறைப் படுத்துவதற்காக வாடிப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதேனும் காணியினுள் அல்லது வளவுக்குள் உட்செல்லுதல்

மற்றும்

(ஆ) 7 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் ஏதாவதொரு அறிவிப்பு அல்லது பெயர்ப்பலகை காட்சிக்கு வைப்பதற்காக வாடிப் பிரதேசத்திற்குள் ஏதேனும் ஒரு காணியின் மீது அல்லது வளவின் மீது ஏதாவதொரு தூணை அமைத்தல் அல்லது கட்டுதல் சட்டமுறையாகும்.

30. மாவட்டச் செயலாளர் :-

(அ) 6 ஆவது அல்லது 27 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் தம்மால் வழங்கப்பட்ட ஏதாவதொரு அனுமதி ;

(ஆ) 9 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற உரிமம் ;

(இ) 15 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் வழங்கப்படுகின்ற ஏதாவதொரு உரிமம்.

**அட்டவணை**

அட்டவணை I

பதுளை மாவட்டத்தின் பதுளை பிரதேச செயலாளர் பிரிவின் பதுளை நகர கிராம அலுவலர் பிரிவின் பதுளை கதிர்காம தேவாலயத்தின் எல்லைகளும், கதிர்காம தேவாலயம் சார்பான சமவெல்லைகளில் அமைந்துள்ள பத்மினி தேவாலயத்தின் எல்லைகளும் :-

தெற்கில் : தேவாலய வீதியும், சரஸ்வதி ஆரம்பப் பாடசாலையும்;
கிழக்கில் : தாழ்ந்த வீதி;
வடக்கில் : தபால் அலுவலக வீதியும், தபால் அலுவலகத் தொகுதியும்;
மேற்கில் : இராஜ வீதி.

அட்டவணை II

பதுளை கதிர்காம தேவாலயத்திற்குச் சார்பான சிம்மாசனம் அமைந்துள்ள சுற்றுப்புற எல்லைகள் :-

தெற்கில் : அணுகு வீதியும், 121 இல.லொட் என அழைக்கப்படும் காணி;
கிழக்கில் : 115/ 1 இல., லொட் மற்றும் 121/ 2/1 என அழைக்கப்படும் காணிகள்;
வடக்கில் : அணுகு வீதி மற்றும் 115, 115/1 மற்றும் 115/2 இலக்க லொட் என அழைக்கப்படும் காணிகள்;
மேற்கில் : தாழ்ந்த வீதி.

அட்டவணை II இல் குறிக்கப்பட்ட எல்லைக் காணிகளின் உரிமைதாரர்களின் விபரங்கள்:-

இல. 115 - எச். எம். கெனயகே மற்றும் ஜெயானந்த விஜயவர்தன சார்பான கடை;

இல. 115/1 - காமினி சிசிர திசாநாயக்க சார்பான வீடு;
இல. 115/2 - உபானந்த சாந்த சார்பான வீடு;
இல. 121/2/1 - தமராச சமரசிங்க சார்பான வீடு;
இல. 121 - கே. பி அமரபால சார்பான வீடும் கடையும்.

10-218

### காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

*கீழ்குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்கள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.*

*2. 2009.09.28 தொடக்கம் 2009.10.12 வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு நுகேகொடை காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.*

*3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களின் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2009.10.19 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.*

**அட்டவணை**

| *காணி பதிவு செய்யப்பட்ட ஏடுகளில் அழிந்துபோன பக்கங்களின் விபரம்* | *காணியின் விபரம்* | *பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம்* |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட கல்கிசை காணிப்பதிவகத்தில் M பிரிவில் 514 ஆம் புத்தகத்தில் 195 ஆம் பக்கம் | மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்துவில் சல்பிட்டி கோறளையில், பொரலஸ்கமுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 ஏக்கர் 02 றூட் 08 பேர்ச்சஸ் விசாலமுடைய காணியும் எஸ். எச். பர்னாந்து அவர்களால் 14.12.1949 ஆந் திகதி அளந்து வரையப்படட 246 இல. வரைபடத்தின்படி பி உம் சி யும் இல. கொண்ட துண்டின் எல்லைகள் :<br><br>வடக்கு : ஹில்டா நாயுடுவிற்கு உரித்தான துண்டு 'ஏ';<br>கிழக்கு : ரெனி கிர்ருடே டி கிளறன்ஸ் ஹேபேட் டி சில்வா மற்றும் எடின் கொன்ஸ்ரன்ஸ் டி சில்வா ஆகியோருக்குச் சொந்தமான எச். எச். மார்டினஸ் அவர்களால் அளந்து வரையப்பட்ட 270 ஜி இல. வரைபடத்தின்படியான ஆதனம்;<br>தெற்கு : தெஹிவலையிலிருந்து வெள்ளவத்தை வரையான வீதி;<br>மேற்கு : டபிள்யூ. பி. பர்னாந்துவிற்கு உரித்தான ஆதனம். முன்பு எவ். சி. வான் குலன்பெரிக்குச் சொந்தமாக இருந்தது. | ஐ. ஏ. என். வீரதுங்க பிரசித்த நொத்தாரிஸ் அவர்களால் 1950.04.14 திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 542 ஆம் இலக்க நன்கொடை உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. பிஎம்/11/02/35/9/2007/පිටු/සැ.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
243/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

*10-69*

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

"செனவிரத்ன பொ என்ட் எசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.08.13 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "செனவிரத்ன பொ என்ட் எசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது ''செனவிரத்ன பொ என்ட் எசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி*

அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 60900.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுற",
இல. 400, டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2009, ஓகத்து 31.

10-03

---

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : 0105500666
கடனாளியின் முழுப்பெயர் : அரக்கம மெதகெதர சந்தன ஜயரத்ன

"கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். வித்தானவசம் என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 487 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2004.04.27 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின்கீழ் நான்கு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐநூற்று ஐம்பத்தொன்பது ரூபா எண்பத்தேழு சதம் (ரூபா 4,57,559.87) 2009.03.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்–

1. குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான நான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து இருநூற்று எழுபத்தேழு ரூபா எழுபத்திரண்டு சதத்தினையும் (ரூபா 4,45,277.72) அதற்கான 2009.03.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக பன்னிரண்டாயிரத்து இருநூற்று எண்பத்திரண்டு ரூபா பதினைந்து சதத்தினையும் (ரூபா 12,282.15) மொத்தமாக நான்கு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐநூற்று ஐம்பத்தொன்பது ரூபா எண்பத்தேழு சதத்தினை (ரூபா 4,57,559.87) அறவீடு செய்யவும் ;

2. குறிப்பிட்ட நான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து இருநூற்று எழுபத்தேழு ரூபா எழுபத்திரண்டு சதத்திற்கான (ரூபா 4,45,277.72) அறவீடு செய்ய வேண்டிய 9.50% மான வருடாந்த வட்டியினை 2009.04.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு);

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளையில் பல்லே பத்துவவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லையில் கங்கொடவில எதிரிசிங்ஹ பாதையில் வரிமதிப்பீட்டிலக்கம் 60/6A என்ற இடத்தில் அமைந்துள்ள கொரக்க கஹவத்த (கொர்க்கஹ கனத்த என்ற காணி உறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது) என்ற காணிக்கு 2003.10.12 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஆர். சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1559/A என்ற இலக்க காணி வரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 2 இன் எல்லைகளாக – வடக்கே : 1558 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி A1 என்ற இலக்க காணித்துண்டும் மற்றும் 10 அடி அகலப் பாதையும்; கிழக்கே : 2167 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 1 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : எதிரிசிங்ஹ பாதையில் 72/80A மற்றும் 72/79A ஆகிய வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்களும்; மேற்கே : எதிரிசிங்ஹ பாதையில் 72/68 ஆம் வரிமதிப்பீட்டி லக்கத்தினை கொண்ட ஆதனமும் 1558 ஆம் இலக்க காணி வரைபடத் தின்படி A1 என்ற இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படு கின்றன. இதன் பரப்பளவு ஆறு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 6பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம், மரங்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் தெல்கந்த நுகேகொடை காணிப்பதிவகத்தில் M2751/111 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

10-188

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : 0100007093
கடனாளியின் முழுப்பெயர் : மஹமரக்கலகே தினேஸ் குமார பெரேரா

"கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. டபிள்யூ. ராஜபக்ஷ என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 7335 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2005.02.20 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் ஐந்து இலட்சத்து முப்பத்தோராயிரத்து நூற்று எழுபத்தாறு ரூபா அறுபது சதம் (ரூபா 5,31,176.60) 2009.02.28 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்–

1. குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான நான்கு இலட்சத்து நாற்பத்துநான்காயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டு ரூபா எண்பத்தொரு சதத்தினையும் (ரூபா 4,44,868.81) அதற்கான 2009.02.28 ஆந் திகதி வரையிலான வட்டியாக எண்பத்தாறாயிரத்து முந்நூற்று ஏழு ரூபா எழுபத்தொன்பது சதத்தினையும் (ரூபா 86,307.79) இதன்படி மொத்தமாக ஐந்து இலட்சத்து முப்பத்தோராயிரத்து நூற்று எழுபத்தாறு ரூபா அறுபது சதத்தினை (ரூபா 5,31,176.60) அறவீடு செய்யவும் ;

2. குறிப்பிட்ட நான்கு இலட்சத்து நாற்பத்துநான்காயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டு ரூபா எண்பத்தொரு சதத்திற்கான (ரூபா 4,44,868.81) அறவீடு செய்ய வேண்டிய 17.75% மான வருடாந்த வட்டியினை 2009.03.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு);

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளையில் உடுகஹ பத்துவவில் சித்தமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள தானாயம் கொடெல்ல மூக்கலான அல்லது ஓமந்தே கனத்த என்ற காணிக்கு 1990.06.28 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டி. டபிள்யூ. அபேசிங்ஹ என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 3654 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 1 இன் எல்லைகளாக – வடக்கே : 976 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 3 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 976 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 1 ஆம் இலக்க காணித்துண்டு 10-11 அடிப்பாதை ; தெற்கே : 2 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : பீ. டி. எல். ஜயசிங்ஹ என்பவரின் தானாயம் கொடெல்ல மூக்கலான எனப்படும் ஓமந்தே கனத்த என்ற காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பத்து தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 10.75பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் 1 ஆம் இலக்க காணித்துண்டின் பாதைக்கான உரிமையும் ஹோமாகம காணிப்பதிவு அலுவலகத்தில் N188/332 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

10-190

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : 0100007397 மற்றும் 0100007874
கடனாளியின் முழுப்பெயர் : அலுத்துரகே இந்திக்க பிரபாத் முனசிங்ஹ

"கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டி. ஆர். பெரேரா என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 810 மற்றும் 1182 ஆம் இலக்கங்களைக் கொண்ட, முறையே 2005.12.08, 2006.12.22 ஆந் திகதிகளிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன்

பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின்கீழ் எட்டு இலட்சத்து ஓராயிரத்து நூற்று முப்பத்தைந்து ரூபா இருபத்தெட்டு சதம் (ரூபா 8,01,135.28) 2009.03.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்–

1. குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஆறு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து இருநூற்று இரண்டு ரூபா தொண்ணூற்று ஆறு சதத்தினையும் (ரூபா 6,84,202.96) அதற்கான 2009.03.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக ஒரு இலட்சத்து பதினாறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்திரண்டு ரூபா முப்பத்திரண்டு சதத்தினையும் (ரூபா 1,16,932.32) இதன்படி மொத்தமாக எட்டு இலட்சத்து ஓராயிரத்து நூற்று முப்பத்தைந்து ரூபா இருபத்தெட்டு சதத்தினை (ரூபா 8,01,135.28)அறவீடு செய்யவும் ;

2. குறிப்பிட்ட ஆறு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து இருநூற்று இரண்டு ரூபா தொண்ணூற்று ஆறு சதத்திற்காக (ரூபா 6,84,202.96) அறவீடு செய்ய வேண்டிய 17.00% மற்றும் 19.90% மான வருடாந்த வட்டியினை 2009.04.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு);

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் ஏ. எஸ். லியனகே என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.''

### அட்டவணை

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், கிழக்கு பஸ்துன் கோரளையில் கங்கபொட பத்துவவில் மஹகம கிராமத்தில் அமைந்துள்ள தென்னபிட்ட கஜுகஸ்வத்த என்ற காணிக்கு 2005.06.11 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். பீ. ஆர். ஆனந்த என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 270 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் A2 இன் எல்லைகளாக– வடக்கே : A1 என்ற இலக்க காணித்துண்டும்; கிழக்கே : A3 என்ற இலக்க காணித்துண்டும் ; தெற்கே : அரசாங்க காணியும் ; மேற்கே : T. P. 118696 என்ற ஆதனமும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு ஒரு றூட் முப்பத்தாறு தசம் ஏழு இரண்டு பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 1றூ. 36.72பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் மத்துகம காணிப்பதிவு அலுவலகத்தில் D196/259 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

10-189

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : 0230002230
கடனாளியின் முழுப்பெயர் : கொரகானகே ஜனக்க வசந்த சில்வா

''நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். டி. பீ. பீ. ஆர். ஜயவர்தன என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 5317 ஆம் இலக்கத்தைக் கொண்ட, 2008.07.10 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின்கீழ் ஐந்து இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து நூற்று எழுபத்தைந்து ரூபா இருபத்திரண்டு சதம் (ரூபா 5,62,175.22) 2009.04.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்–

1. குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஐந்து இலட்சம் ரூபாவையும் (ரூபா 5,00,000) அதற்கான 2009.04.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக அறுபத்திரண்டாயிரத்து நூற்று எழுபத்தைந்து ரூபா இருபத்திரண்டு சதத்தினையும் (ரூபா 62,175.22) இதன்படி மொத்தமாக ஐந்து இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து நூற்று எழுபத்தைந்து ரூபா இருபத்திரண்டு சதத்தினை (ரூபா 5,62,175.22) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட ஐந்து இலட்சம் ரூபாவிற்காக (ரூபா 5,00,000) அறவீடு செய்ய வேண்டிய 25.00% மான வருடாந்த வட்டியினை 2009.05.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள்

சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு);

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப் பட்டுள்ளது.''

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குரு கோரளையில் ராகம் பத்துவவில் ஜா-எல நகர சபை எல்லையில் சோவிஸ் மாவத்தையில் வரிமதிப்பீட்டிலக்கம் 17/2A இல் கலஎலிய என்ற இடத்தில் அமைந்துள்ள கஹட்டகஹட்டு பகுதி என்ற காணிக்கு 2006.05.31 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். டி. என். டீ. பெரேரா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 4615 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 2 இன் எல்லைகளாக - வடக்கே : பாதையும் ; கிழக்கே : ஈ. எஸ். பிரணாந்து என்பவரது காணித்துண்டும் ; தெற்கே : வாய்க்காலும் ; மேற்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பன்னிரண்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 12.25பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் பாதைக்கான உரிமையும் கம்பஹா காணிப்பதிவு அலுவலகத்தில் H75/43 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

10-191

---

### இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : 0180000020

கடனாளியின் முழுப்பெயர் : மந்திரிகே உபாலி சந்திரசிரி மற்றும் மெத்தகொடகே வசந்தி குமாரசிங்ஹ

''கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டி. ஆர். பெரேரா என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 1300 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2007.07.12 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின்கீழ் மூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நூற்று எண்பது ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூபா 3,42,180.42) 2009.02.28 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்-

1. குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நூற்று அறுபத்திரண்டு ரூபா நாற்பத்தேழு சதத்தினையும் (ரூபா 2,99,162.47) அதற்கான 2009.02.28 ஆந் திகதி வரையிலான வட்டியாக நாற்பத்து மூவாயிரத்து பதினேழு ரூபா தொண்ணூற்று ஐந்து சதத்தினையும் (ரூபா 43,017.95) இதன்படி மொத்தமாக மூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நூற்று எண்பது ரூபா நாற்பத்திரண்டு சதத்தினை (ரூபா 3,42,180.42) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நூற்று அறுபத்திரண்டு ரூபா நாற்பத்தேழு சதத்திற்காக (ரூபா 2,99,162.47) அறவீடு செய்ய வேண்டிய 21.80% மான வருடாந்த வட்டியினை 2009.03.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு);

மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.''

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், சியனே கோரளையில் அதிகாரி பத்துவவில் ஹெய்யன்துடுவ கிராமத்தில் அமைந்துள்ள

தவட்டகஹலந்த என்ற காணிக்கு 1995.06.17 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டி. சீ. எம். எஸ். விமலரத்ன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 96/1995 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் A இன் எல்லைகளாக - வடகிழக்கே : 4566 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி G என்ற இலக்கக் காணித்துண்டு (10 அடி அகலப் பாதைக்கான ஒதுக்கம்) ; தென்கிழக்கே : 4566 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி F என்ற இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் ; தென்மேற்கே : 4566 ஆம் இலக்க வரைபடத்தின்படி F என்ற இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகதியும் ; வடமேற்கே : 4566 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி G என்ற இலக்க காணித்துண்டும் (10 அடி அகலப் பாதைக்கான ஒதுக்கம்) அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பன்னிரண்டு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 12பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம், மரங்கள், மற்றும் ஏனைய அனைத்துடன் G என்ற இலக்க காணித்துண்டின் பாதைக்கான உரிமையும் கம்பஹா காணிப்பதிவகத்தில் C827/31 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

10-187

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

"உயன்வத்தை லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2008.01.01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "உயன்வத்தை லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "உயன்வத்தை லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாரச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 62564.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுற",
இல. 400, டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
2009, ஓகத்து 31.

10-04

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

"எமிங்ரன்ட் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2008.11.20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எமிங்ரன்ட் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "எமிங்ரன்ட் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாரச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 66257
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுற",
இல. 400, டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
2009, ஓகத்து 31.

10-05

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் பிக்யூ116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 445708 - பத்த கண்காணம்கே பவித்திரா மனோரிக்கா மல்சாந்தி

19.06.2009 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு தீர்மானிக்கப் பட்டது:-

"கடன் எடுத்த பத்த கண்காணமகே பவித்திரா மனோரிக்கா மல்சாந்தி என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக மாத்தறை பிரசித்த நொத்தாரிசு டி. திசாநாயக்கவின் 09.05.2008 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 20171 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும் ; அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு மேற்படி முறி 20.04.2009 ஆந் திகதி வரை ரூபா 12,16,082.19 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம்

அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி முறி இலக்கம் 20171 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையின் ரூபா 12,16,082.19 வுடன் 21.04.2009 ஆந் திகதி முதல் ஏலகத்திகதி வரை ரூபா 10,00,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 33 வீத வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 99, உரிமம்பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், கங்கபொட பத்து மற்றும் அக்குருகொட மற்றும் பாமலன்ன கிராமங்கள் இடையில் அமைந்துள்ள நிலஅளவையாளர் யூ. எஸ். அதபத்துவின் 03.06.1972 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 433 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3, 4 மற்றும் 5 லொட் A என்ற காணிகளின் பகுதிபடுத்திய நிலஅளவையாளர் யு. எஸ். அதபத்துவின் 14.12.1995 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 3716 இல் காண்பிக்கப்பட்ட கரண்ணியாகொட தலுகாயேன, நெக்கடிகேவத்த, கல்பெட்டகெல, பல்லே வராகவத்த, மொரவக கோரலாய ராலகேவத்த, கொடயேன வத்த, தொலயேன மற்றும் கல்ஒருவயேண அல்லது உடுகும்புரயேண காணிகளின் பகுதிபடுத்திய காணித் துண்டான லொட் 5 என்ற காணியின் எல்லைகள் - வடக்கு: இக் காணியின் லொட் 4 ; கிழக்கு : கொட்டகாயேன ; தெற்கு : அரசாங்க குத்தகை காணி ; மேற்கு : இக் காணியின் லொட் 6 மற்றும் ; வடக்கு- மேற்கு : ரோட் என்ற லொட் 7 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 3றூ. 36.25பே.) மற்றும் 10 அடி பாதை என்ற லொட் 7 பாவிக்கும் உரிமையுடன் இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் C594/109 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி காணி தற்சமயம் வரையப்பட்ட நிலஅளவையாளர் பி. எச். பி. நிஹால் சில்வாவின் 10.03.2008 வரைபடம் இலக்கம் 67/08 இல் காண்பிக்கப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10-106

---

## மக்கள் வங்கி- முதலாவது மாநகரக் கிளை

### 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம்.

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் 29.08.2008 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படு கின்றது :-

"யசார என்ரபிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி இமியகே டோனா ஹிமால் லலனி பெரேரா அத்தாட்சிப்படுத்திய 23.08.2004 ஆந் திகதி கொண்ட 337 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது. ஆதலால் இப்பொழுது மேற்படி 337 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது நாலு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று எட்டு ரூபா பதினாறு சதமும் (ரூபா 4,99, 998.16), முப்பது இலட்சம் ரூபாவும் (ரூ. 30,00,000) தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. ஆதலால் நாலு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று எட்டு ரூபா பதினாறு சதத்தையும் (ரூபா 4,99, 998.16) முப்பது இலட்சம் ரூபாவையும் (ரூ. 30,00,000), நாலு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று எட்டு ரூபா பதினாறு சதத்தின் மீது (ரூபா 4,99,998.16) 27.06.2008 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 26 சதவீதப்படி மேலும் வட்டியையும் முப்பது இலட்சம் (ரூ. 30,00,000) ரூபா மீது 01.05.2008 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 27 சதவிகிதப்படி மேலும் வட்டியையும் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 337 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பல்லே பற்று வல்பொல மண்டாவில வீதி தற்பொழுது 45A என்னும் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் பத்தரமுல்ல பட்டின சபையின் தலங்கம பிரிவிற்குட்பட்ட வல்பொலயில் அமைந்துள்ளதும் "மிதெல்ல கஹாவத்தை" என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. கப்புகீயன தயாரித்த 28.11.1982 ஆந் திகதி கொண்ட 516 ஆம் இலக்க வரைபடத்தில் "துண்டு இல. 1" என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி "துண்டு 1" என்பதற்கு எல்லைகளாக - வடகிழக்கில் : வீதி; தென்கிழக்கில் : துண்டு இல. 2 ; தென்மேற்கில் : ஏ. ஜிமோரிஸ் என்பவரின் காணி; வடமேற்கில் : ஏ. ஜிமோரிஸ் என்பவரின் காணி என்பன அமைந்துள்ளன. இதன் பரப் பளவு இருபத்தொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 21பே.). இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் G 1355/207 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை, பல்லே பற்று கொட்டிகாவத்த-முல்லேரியாவ பிரதேச சபை எல்லை களுக்குட்பட்ட வல்பொல கிராமத்தில் அமைந்துள்ளதும் 45 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் (பகுதி) கொண்டதும் 'மில்லகஹாவத்த" என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. ஜீரசிங்க தயாரித்த 03.10.1989 ஆந் திகதி கொண்ட 1484 ஆம் இலக்க வரைபடத்தில் "துண்டு இல. 1" என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக - வடக்கில் : கே. எம். அல்விஸ், கே. பிரேமதாச மற்றும் ஏனையோரின் காணி; கிழக்கில் : வீதி மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். காரியவசம் தயாரித்த 20.09.1989 ஆந் திகதித கொண்ட 715 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு இல. 1 ; தெற்கில் : எம். பரணமான, ஆர். பெரேரா, டீ. சீ. வனசிங்க ஆகியோரின் காணி; மேற்கில் : கே. பிரேமதாச மற்றும் ஏனை யோரின் காணி என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு இருபத் தைந்து தசம் ஏழு சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25.70பே.). இது

ஹோமாகம காணிப்பதிவகத்தில் G 792/268 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கொழும்பு வடக்கு.

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம் (மேற்கு வலயம் 01),
இல. 11, டியுக் வீதி,
கொழும்பு 01.

10-166

---

### மக்கள் வங்கி- மஹர கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 15.05.2009 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

''கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஈ. டீ. மல்லவராச்சி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 09.09.2008 ஆந் திகதி கொண்ட 940 ஆம் இலக்க முறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் மர்லின் ஹீனட்டிகல மற்றும் ஷர்லி ஹீனட்டிகல என்பவர்கள் தவணை தவறியுள்ளமையாலும், குறிப்பிட்ட முறியின் கீழ் தற்போது மூன்று இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 3,93,333.34) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் மூன்று இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 3,93,333.34) பணத்தொகைக்காக 12.11.2008 ஆந் திகதியிலிருந்து ஏலம் மூலம் திகதி வரை 26% வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் ''29எல்'' என்னும் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனகள் பெறப்பட இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட மூன்று இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 3,93,333.34) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். இராமநாயக்க அவர்களால் குறிப்பிட்ட இலக்கம் 940 கொண்ட முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது''

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விபரம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரி பத்துவ பியகம பிரதேச சபையின் கடவத்தை உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட பஹல பியன்வெல எனும் கிராமத்தில் அமைந்துள்ள மகுல்கஹவத்தை மற்றும் மீகஹவத்தை எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. கட்டுகம்பொல அவர்களால் 31.07.1997 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 28/1997 எனும் வரைபடத்தில் காணப்படும் 2D எனப்படும் காணித்துண்டின் எல்லைகளாக - வடகிழக்கில் : 2E எனப்படும் காணித்துண்டும் மற்றும் 9421 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள 3 ஆம் இலக்கக் காணித்துண்டும் (பாதை) ; தென்கிழக்கில் : 9421 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள 3 ஆம் இலக்கக் காணித்துண்டும் பாதையும் ; தென்மேற்கில் : 9421 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள 1 ஆம் இலக்கக் காணித்துண்டும் எஸ். அல்விஸ் என்பவரின் காணி) ; வடமேற்கில் : 2C எனப்படும் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த பதினொன்று தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0று. 11.2பே.) விசாலமான காணியும் அதற்குற்பட்ட மரங்கள், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் இலக்கம் C 467/132 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பாதை உரித்துக்களும் உள்ளடங்கும்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
கம்பஹா,
இலக்கம் 131, கண்டிவீதி,
பெலும்மஹர,
முதுன்கொடை.

10-160

---

### ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கிருலப்பனை கிளை) —
மம்பிற்றிய ஆராச்சிகே குணசேன மற்றும் வர்ணபுரகே சமிந்த சுஜீவ சந்திரசேன

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''மம்பிற்றிய ஆராச்சிகே குணசேன மற்றும் வர்ணபுரகே சமிந்த சுஜீவ சந்திரசேன கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. ஆர். டீ சில்வாவினால் அத்தாசிப்படுத்தப்பட்ட 2005, சனவரி 17 ஆந் திகதியிடப்பட்ட 1373 ஆம் இலக்க முறிமீது மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும் சொல்லப்பட்ட மம்பிற்றிய ஆராச்சிகே குணசேன காலமானதை அடுத்து. கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில், இடம்பெற்ற உயில் தொடர்பான 37519/ ரீ வழக்கு இலக்கத்திற்கு அமைய வெவ்வேறாக்கப்பட்டதும் மற்றும் நிர்வாக கடிதங்கள் விநியோகிக்கப்பட்ட நிலையில் 2009.07.31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது முப்பது இலட்சத்து இபத்தெட்டாயிரத்து முந்நூற்று அறுபத்து நான்கு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 30,28,367.37) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது

வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1373 இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 30,28,364.37 பணத்தொகையை 2009.08.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தளுவத்தவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கிருலப்பனை 44 ஆம் இலக்க பகுதியில் உள்ள பூர்வராம மாவத்தையின் 77 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தில் உள்ள ஹெடவகஹா வத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடம் மற்றும் எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். லோகநாதனினால் தயாரிக்கப்பட்ட 1967 மே 17 ஆந் திகதியிடப்பட்ட 432 இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 5481 ஏ3 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள்- வடக்கு : பூர்வராம மாவத்தை ; கிழக்கு : காணித்துண்டு 548 ஐ. சீ. ஐ. ; தெற்கு : காணித்துண்டு 588 ஐ சீஐ ; மேற்கு : காணித்துண்டு 5481ஏ2. அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 432 இற்கு அமைவானதும் கொழும்பு காணிப் பதிவகத்தில், கிருலப்பனை 74/282 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 9.25பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/6

---

### ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(தெமட்டகொடை கிளை) —

விஜேசிங்க பத்தினிகே தினேஷ் பெரேரா விஜேசிங்க (லனிக் ஸ்போட்ஸ் நிறுவனத்தின் ஏக உரிமையாளர்)

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''விஜேசிங்க பத்தினிகே தினேஷ் பெரேரா விஜேசிங்க (லனிக் ஸ்போட்ஸ் நிறுவனத்தின் ஏக உரிமையாளர்) கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டீ. குணதிலகவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, திசெம்பர் 16 ஆந் திகதிய 1471 ஆம் இலக்க முறி, மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி. டீ. ரி. தர்மதிலக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, மே 28 ஆந் திகதியிடப்பட்ட 2141 ஆகிய இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும் 2009.07.31 ஆந் திகதியன்று உள்ளாவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிகள் மீது ஒரு கோடி தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து முப்பத்திரண்டு ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 1,97,54,932.72) கொண்ட பணத்தொகை யொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும் அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1471 மற்றும் 2141 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,97,54,932.72 பணத்தொகையை 2009.08.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் பி. முதுகுமாரண என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (ஆனால் கொழும்பு பதிவுப் பிரிவிற்கு உட்பட்டது), சியனே கோறளையின் மேற்கில் உள்ள அதிகாரிப் பற்றுவின் களனிப் பிரதேச சபைக்கு உட்பட்ட களனி பிரிவின் வனவாசல கிராமத்தில் உள்ள கொங்கஹவத்த மற்றும் முல்லேகும்புரவில்லேவ என அழைக்கப்படும் காணி, அத்துடன் வனவாசல வீதி, 107 மற்றும் 109 வரிமதிப்பீட்டிலக்கத்திற்கு உட்பட்ட கட்டடங்கள், மற்றும் எல்லாம் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். கருணாசேகரவினால் தயாரிக்கப்பட்ட 23.06.2005 ஆந் திகதியிடப்பட்ட 4745 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : நாகசேன வித்தியாலயத்தின் ஆதனம், சீ. ரத்நாயக்க மற்றும் ஏனையவர்களின் ஆதனம். அத்துடன் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் காணி ; கிழக்கு : எஸ். ஜயவீர, சீ. ரத்நாயக்க மற்றும் ஏனையவர்களுக்குச் சொந்தமான ஆதனங்கள் மற்றும் வனவாசல வீதி ; தெற்கு : ரி. டீ. லனி நோனாவினால் உரிமை கோரப்படும் வனவாசல வீதியின் 105/10 வரிமதிப்பீட்டிலக்கம், மற்றும் ஜீ.டீ. ஆனந்தவினால் உரிமை கோரப்படும் 105/10 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள வீதி (தனியார்) ; மேற்கு : முல்லேக்கும்புர மற்றும் ரீ. டீ. லனி நோனாவினால் உரிமை கோரப்படும் வனவாசல வீதியில் உள்ள 105/14 வரிமதிப்பீட்டிலக்கத்தைச் சேர்ந்ததும், வரைபட இலக்கம் 4745 இற்கு அமைவான இரண்டு றூட் இருபத்தி இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 22.2பே.) விஸ்தீரணமான கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் சீ 684/46 இல் பதிவு செய்யப்பட்டதுமான ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/19

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிடெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(மாளிகாவத்தை கிளை) — கீர்த்திசிங்க சரத் கொடலாவத்த ஆராச்சிகே

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''கீர்த்திசிங்க சரத் கொடலாவத்த ஆராச்சிகே கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். எம். சீ. பீ, வெத்தசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 2271 ஆம் இலக்க முறி மீதான ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பிலான கொடுப்பனவில் தவணைகளை செலுத்த தவறியுள்ளதாலும், 2009.07.31 ஆந் திகதி அன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்குச் சொல்லப்பட்ட முறி மீது மூன்று இலட்சத்து எண்பத்தேழாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 3,87,599.55) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும் அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் விபரிக்கப் பட்டனவும் சொல்லப்பட்ட 2271 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 3,87,599.55 கொண்ட பணத்தொகையை 2009.08.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் பியரத்ன முதுகுமாரண என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட, சல்பிற்றி கோரளை பற்றுவின் மாளிகாவத்தை மேற்கு பிரிவு 15 இல் உள்ள ஜயந்த வீரசேகர மாவத்தையின் 229/1 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள கீழ் தட்டு ஆதனம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர், கே. டீ. பீலிக்ஸ் ஆர். பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 1984 திசெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட கூட்டாதிக்க வரைபட இலக்கம் சீஓ/ என்ஏ/ 104ஏ/ காணித்துண்டு 55 இல் காட்டப்பட்டதும், கூட்டாதிக்க உரிமைப் பிரிவான பி49/ ஜி/ 4 என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட கீழ்த் தட்டு ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : சீஈ9, சீஈ10 மற்றும் சீஈ1 என்ற ஒன்றியத்தின் சுவரின் மத்தியையும் ; கிழக்கு : பி49/ஜீ/3, சீஈ3, சீஈ10 மற்றும் சீஈ7 என்ற ஒன்றியத்தின் சுவரின் மத்தியையும்; தெற்கு : சீஈ1, மற்றும் சீஈ8 என்ற ஒன்றியத்தின் சுவரின் மத்தியையும் ; மேற்கு : சீஈ1 மற்றும் சீஈ8 என்ற ஒன்றியத்தின் சுவரின் மத்தியையும் ; அதிஉயர் நிலை முதலாவது தட்டின் தரைப் பரப்பின் நடுப்பகுதி அதிகீழ் நிலை ஒனறியத்தின் தரை நாநூற்றி நாற்பத்து ஐந்து சதுர அடி (445 சதுர அடி) பரப்பைக் கொண்டதும், கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் Con.எ58/10 இன் கீழ், சொல்லப்பட்ட கூட்டாதிக்க வரபைட இலக்கம் சீ.ஓ./என். ஏ/104ஏ/காணித்துண்டு 55 க்கு அமைய, பதிவு செய்யப்பட்டதுமான ஆதனம்.

பிரிக்கப்படாத பி. 49/ ஜீ/ 4 ஒன்றியத்திற்கான பொதுவான கூட்டாதிக்க ஆதனப் பங்கின் பெறுமதி 8.33%

அத்துடன் 2004, ஒற்றோபர் 5 ஆந் திகதியிடப்பட்ட 2271 ஆம் இலக்க அடகு முறியில் மேலதிகமாக விபரிக்கப்பட்ட பொதுவான உடமைகளுடன் இரண்டாவது அட்டவணையில் தெரிவித்ததற்கு அமை வானது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/ 1

---

**மக்கள் வங்கி- தங்காலை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம்.*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 30.06.2009 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது :-

''மக்கள் வங்கிப் பெயருக்கு தங்காலை பிரசித்த நொத்தாரிசு பீ. எம். டீ. குமுதினி என்பவரால் இலக்கம் 1853 மற்றும் 2006.07.26 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் என்ற ஈட்டு முறியின் பிரகாரம் கொடுப்பனவில் உபாலி ஸேனாரத்ன எதிரிவீர என்பவர் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் இலக்கம் 1853 ஈட்டு முறியின்மீது பத்து இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எழுநூற்று மூன்று ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 10,47,703.89) பணம் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளபடியால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி (29D) என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பத்து இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எழுநூற்று மூன்று ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 10,47,703.89) பணம் 2008.10.28 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஒரு வருடத்துக்கு 16.75% மேலும் வட்டியையும் ஏலவிற்பனைத் திகதிவரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) 29 எல் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து பணம் அறவிடுவதற்காக மாத்தறை உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பி. ஆனந்த என்பவரால் இலக்கம் 1853 என்ற ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க

ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப் படுகின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விபரம்**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம் மாத்தறை பெரும் பகுதிக்குள் அமைந்திருக்கும் ஹித்தெடியவில் அமைந்திருக்கும் அத்தரவெல அல்லது அத்தரவெல வத்த என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ரனவக என்பவரால் 2004.10.24 ஆந் திகதியில் அளந்து தயாரித்த இலக்கம் 125/2004 என்ற வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கப்பட்ட இலக்கம் 06 என்ற துண்டுக்கான எல்லைகள் - வடக்குக்கு : இலக்கம் 125/2004 என்ற வரைபட இலக்கம் 05 என்ற துண்டும் ; கிழக்கிற்கு : வீதியும் ; தெற்கிற்கு : இலக்கம் 125/2004 என்ற வரைபட இலக்கம் 07 என்ற துண்டும் ; மேற்கிற்கு : இலக்கம் 125/2004 என்ற வரைபட இலக்கம் 08 என்ற துண்டும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் பதின்மூன்று தசம் ஐந்து ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.55பே.). விசாலம் கொண்ட இக் காணியும் அதில் அமைந்திருக்கும் கட்டடங்கள், மரம், மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி மாத்தறை மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் A 489/59 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவி பிரதேச முகாமையாளர்,
ஹம்பாந்தோட்டை.

மக்கள் வங்கி,
பிரதேச முகாமையாளர்,
இலக்கம் 7ஏ, டவர்ஹிள் மாவத்தை,
ஹம்பாந்தோட்டை.

10-163

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(தெமட்டகொடை கிளை) — ஜயவீர மொஹொப்பு ஆராச்சிகே உப்புல் குமாரதுங்க, ஜயவீர மொஹொப்பு ஆராச்சிகே குணதிலக மற்றும் ஜயவீர மொஹொப்பு ஆராச்சிகே ஸ்ரீ லால் குணரத்ன
(சில்வர் ரேய்ஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்தின் பங்காளர்கள்)

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"ஜயவீர மொஹொப்பு ஆராச்சிகே உப்புல் குமாரதுங்க, ஜயவீர மொஹொப்பு ஆராச்சிகே குணதிலக மற்றும் ஜயவீர மொஹொப்பு ஆராச்சிகே ஸ்ரீ லால் குணரத்ன (சில்வர் ரேய்ஸ் டிஸ்ரிபியூட்டர் நிறுவனத்தின் பங்காளர்கள்) கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹலொலுவ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, யூன் 27 ஆந் திகதிய 492 ஆம் இலக்க முறி, மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யூ. எஸ். கே. ஹேரத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, நவெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட 2570 முறிகள் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும் 2009.07.31 ஆந் திகதியன்று உள்ளாவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிகள் மீது எட்டு இலட்சத்து இருபத்தோராயிரத்து நூற்று பதினொரு ரூபா அறுபத்தெட்டு சதம் (ரூ. 8,21,111.68) கொண்ட பணத்தொகை யொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும் அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 492 மற்றும் 2570 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 8,21,111.68 பணத்தொகையை 2009.08.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தளுவத்தவினால் என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், (ஆனால் அவிசாவளை பதிவுப் பிரதேசத்திற்கு உட்பட்டது) ஹேவாகம் கோரளை, மெதபற்று, ஹோமாகம பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பட்டவல கிராமத்தில் "மீகஹலந்த சம்புத்தி கெபல" என அழைக்கப்படும் காணி மற்றும் அதனுடன் எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் யூ. எல். என். ரீ. சந்தனவினால் தயாரிக்கப்பட்ட 1997, யூன் 15 ஆந் திகதியிடப்பட்ட 1240 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்டுள்ளதுமான பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : எஸ். ஏ. குணவர்தன மற்றும் ஏனையவர்களால் உரிமை கோரப்பட்ட காணியும் மற்றும் வரைபட இலக்கம் 999 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 1 ; கிழக்கு: காணித்துண்டுகள் 7, 3 மற்றும் 6 ; தெற்கு : காணித்துண்டு 2 ; மேற்கு : ஈ. பியவதியினால் உரிமை கோரப்படும் காணி அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1240 இற்கு அமைவான மூன்று றூட்ஸ் மற்றும் 34 பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 34பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள 492 மற்றும் 2570 முறி இலக்கங்களின் இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டதற்கு அமைவாக பாதையுரிமையையும் கொண்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/17

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(ஹல்ஸ்டோர்ப் கிளை) – மகேவிட்டகே ஜோசப் பெனடிக்ற் லக்ஷ்மன் பெரேரா

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" மகேவிட்டகே ஜோசப் பெனடிக்ற் லக்ஷ்மன் பெரேரா என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹலொலுவ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, ஓகத்து 15 ஆந் திகதிய 1725 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும் 2009.07.31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது நாற்பத்துமூன்று இலட்சத்து இருபத்தாறாயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பது ரூபா அறுபத்துநான்கு சதம் (ரூ. 43,26,979.64) கொண்ட பணத்தொகையொன்றை தற்போது சேருமதியாகவும் வருமதியாகவும் உள்ளதால் அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1725 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 43,26,979.64 பணத்தொகையை 2009.08.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் பீ. முதுகுமாரண என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (ஆனால் கொழும்பு பதிவுப் பிரிவிற்குள்) அளுத்குறு கோரளையின் றாகம் பற்றுவின் வத்தளை பிரதேச சபையின் ஹெந்தனை உப அலுவலக எல்லைகளுக்குள் திம்பிரிகஸ்யாயவில் பலகல வீதி வழியே அமைந்துள்ளதும், பலகல வீதி, 46 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொணடதும் திம்பிரிகஹவத்தை என அழைக்கப்படும் காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜி. குணதிலக என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, மாச்சு 10 ஆந் திகதிய 4642 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 2A என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாம் சேர்த்து. அத்துடன் சொல்லப்பட்ட காணித்துண்டு 2A இன் எல்லைகள் - வடக்கு : 4/1975 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1; கிழக்கு : 4/1975 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 3; தெற்கு : பாதை அத்துடன் ; மேற்கு : பாதை. அத்துடன் கொழும்பு காணிப் பதிவகத்தில் B993/67 என்னும் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 4642 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் இருபத்திரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 22பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

1725 ஆம் இலக்க மேற்கூறப்பட்ட முறியின் இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளதும் 4/1975 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ளதுமான காணித்துண்டு 01 இன் மீதும் அதன் வழியேயும் உள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/7

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் பிக்யூ116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன்கணக்கு இலக்கம் : 325494 – ஜீவன் ஏவா நியால் புஷ்பகுமார

24.03.2009 கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது:-

"கடன் எடுத்த ஜிவான் ஏவா நியால் புஷ்பகுமார என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக காலி பிரசித்த நொத்தாரிசு கே. சி. விஜயநாராயணவின் 12.10.2006 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1734 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் ; 29.10.2008 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு மேற்படி முறிமூலம் ரூபா 8,55,964.03 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் மேற்படி முறி இலக்கம் 1734 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி.க்கு ஈடுவைக்கப்பட்ட அவ் அட்டவைணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 8,55,964.03 பணத்தொகையுடன் 30.10.2008 ஆந் திகதி முதல் ஏலத்திகதிவரை ரூபா 6,56,250 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சத வட்டியுடன் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 உரிமம்பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப் பட்டது."

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், வெலபொட பத்து மீட்டியகொட கிராமத்தில் அமைந்துள்ள மணஓவிட்ட அல்லது வத்த என்ற

காணியின நிலஅளவையாளர் சி. டி. த என். மண்ணகுலசூரிய 01.06.2004 ஆந் திகதியுடைய வரைபடம் இல. 2024Aஇல் காண்பிக்கப்பட்ட லொட் 4 இன் பகுதிபடுத்திய லொட் 4B என்ற காணியின் எல்லைகள்– வடக்கு : இக்காணியின் லொட் 4A ; கிழக்கு : ஜின்தொட்ட எத்தவத்த மற்றும் தெல்காவத்த ; தெற்கு : இக் காணியின் லொட் 05 ; மேற்கு : இக் காணியின் லொட் 4D (பாதை) இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 23.30பே.) 0.05903 ஹெக்டயார். மேற்படி வரைபடம் இலக்கம் 2024A இக் காணி காலி காணிப் பதிவகத்தில் C 737/259 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வரைபடம் இலக்கம் 2024A இல் காண்பிக்கப்பட்ட பாதைக்கு என்ற லொட் AD பாவிக்கும் உரிமையுடன்.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

9-105

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(வெள்ளவத்தை கிளை) — தந்திரிகே கருணாரத்ன நவரத்ன மறுபெயர் தந்திரிகே நவரத்ன

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" தந்திரிகே கருணாரத்ன நவரத்ன மறுபெயர் தந்திரிகே நவரத்ன கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் 2004, நவெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட முறி இலக்கம் 1316 கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. ஆர். டீ. சில்வாவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் கொடுப்பனவுகளில், தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2009,07.31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிமூலம் பதினொரு இலட்சத்து ஆறாயிரத்து ஐநூற்று எழுபத்தைந்து ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 11,06,575.75) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும் அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட முறி இலக்கமாகிய 1316 மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டன வுமான ஆதனமும், வளவும், சொல்லப்பட்ட 11,06,575.75 பணத்தொகையை 2009.08.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஈ. எஸ். ராமநாயக என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோரளை, பள்ளே பற்று, தெகிவளை கல்கிசை மாநகர சபைக்கு உட்பட்ட, களுபோவில வின் பகுதி 1 விலவெல, மகா விகாரை வீதியின் 62/8 வரிமதிப்பீட் டிலக்கத்தைக் கொண்டுள்ள ''எற்றம்பகஹாவத்த'' ''கொலம்பகே வத்த'' ''அம்பகஹாவத்த'' ''ஹெடவக்கஹவத்த'' ''கொலம்பகே ஓவிற்ற'' மற்றும் ''வட்டபோடகும்புர'' மறுபெயர் ''பிம்புருகஹஓவிற்ற'' என அழைக்கப்படும் காணி மற்றும் கட்டங்கள் உள்ள ஆதனத்தில், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. பி. தொடன்வலவினால் தயாரிக்கப்பட்ட 1994, செத்தெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட 1722 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், காணித்துண்டு ஏ. என அடையாளமிடப்பட்டதும், விபரமாக விளக்கப்பட்டதுமான காணித் துண்டு ஏ முழுவதும் அதிலுள்ள எல்லாமும் சேர்த்து. சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : ஸ்ரீ மகா விகாரை வீதியில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 62/11 ஐக் கொண்டுள்ள ஆதனம்; கிழக்கு : ஸ்ரீ மகா விகாரை வீதியில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 62/9 ஐக் கொண்டுள்ள ஆதனம்; தெற்கு : ஸ்ரீ மகா விகாரை வீதியில் உள்ள வரிமதிப்பிலக்கம் 62/9 ஐக் கொண்டுள்ள ஆதனம் அத்துடன் எம். விக்ரமரட்னவுக்கும் மற்றையோருக்கும் உரித்தான காணி; மேற்கு : ஸ்ரீ மகா விகாரை வீதியில் வரிமதிப் பீட்டிலக்கம் 62/ 11 ஐக் கொண்டுள்ளதும் வரைபட இலக்கம் 1722 இன்படியான பத்து தசம் பூஜ்யம் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10.06பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

5456 ஆம் இலக்க அடகு முறிக்கமையவும் இரண்டாவது அட்டவணைக்கு அமைய விபரிக்கப்பட்ட வீதிக்கான உரித்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/20

---

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

#### சபையின் தீர்மானம்

"1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், (இதனகத்துப் பின்னர் ''கம்பனி'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), அதன் பதிவு

செய்யப்பட்ட அலுவலகத்தைக் கம்பளையில் கொண்டுள்ளதுமான சாரு இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், எல்லாம் இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். ஹப்புதந்திரி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, பெப்புருவரி 2 ஆந் திகதிய 199 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறியின்மீதும், பிரசித்த நொத்தாரிசு சீ. பீ. ராஜரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, ஒற்றோபர் 13 ஆந் திகதிய 466 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும், பிரசித்த நொத்தாரிசு சீ. பீ. ராஜரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, ஒற்றோபர் 13 ஆந் திகதிய 467 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும், பிரசித்த நொத்தாரிசு எஸ். ஹப்புதந்திரி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, திசெம்பர் 10 ஆந் திகதிய 619 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளராதலாலும், 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஐம்பத்தொரு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூற்று எழுபத்தாறு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 51,97,876.59) கொண்ட தொகையும் 2009, மே 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இருபத்துமூன்று இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று எட்டு ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 23,94,998.84) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியும் இருபத்தைந்து இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 25,29,775.72) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டு வீத (28%) வட்டியும் சொல்லப்பட்ட 199 ஆம், 466 ஆம், 467 ஆம் மற்றும் 619 ஆம் இலக்க முறிகள் மீது சொல்லப்பட்ட கம்பனிகளிடமிருந்து இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஐம்பத்தொரு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூற்று எழுபத்தாறு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 51,97,876.59) கொண்ட தொகையை 2009, மே 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இருபத்துமூன்று இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று எட்டு ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 23,94,998.84) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் இருபத்தைந்து இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 25,29,775.72) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டு வீத (28%) வட்டியுடனும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 199 ஆம், 466 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் எதிரிசிங்க சம்பத் ஜனக்க சில்வா மற்றும் ரத்னாவலி ஆபரணா பொல்வத்தேகெதர ருமாலி தறங்கிக்கா எனவும் குறிப்பீடு செய்யப்படும் ரத்னாவலி ஆபரணா பொல்வத்தேகெதர தறங்கிகா நவரத்ன என்போரினாலும், 467 ஆம்இலக்க ஈட்டுமுறிமூலம் மொஹமட் சிராஜுடீன் அஹமட் முனீர் என்பவரினாலும், 619 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ரத்னாவலி ஆபரணா பொல்வத்தேகெதர ருமாலி தறங்கிக்கா எனவும் குறிப்பீடு செய்யப்படும் ரத்னாவலி ஆபரணா பொல்வத்தே கெதர தறங்கிகா நவரத்ன என்போரினாலும் (எல்லோரும் கம்பனிக்காகவும் அதன் சார்பிலும் பணிப்பாளர்களாகவுள்ளனர்) இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.”

### 199 ஆம், 466 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்திலுள்ள உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவின் கடுக்கர இஹல கோறளேயில் கொப்பேவெலவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும், மரங்களுடனும், பயிர்களுடனும், மண்ணுடனும் மற்றும் எல்லாவற்றுடனும் வட்டகொடவத்த மறுபெயர் வட்டகொடஹேன எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியினதாய் (உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். ரீ. பீ. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, ஏப்பிறல் 8 ஆந் திகதிய 981 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1பீ என அடையாளமிடப்பட்ட காணித்துண்டாகவுள்ளதும்), உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். அபேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, யூன் 27 மற்றும் யூலை 18 எனத் தேதியிடப்பட்ட 1349 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : சொல்லப்பட்ட 1349 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 ; கிழக்கில் : சொல்லப்பட்ட நிலஅளவையாளரினால் தயாரிக்கப்பட்ட 693 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள ஹொரந்தப்புவவின் காணி ; தெற்கில் : காணித்துண்டம் 5ஏ, மற்றும் ; மேற்கில்: சொல்லப்பட்ட 1349 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 4 மற்றும் 3 ; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 1349 ஆம் இலக்க வரைபத்தின்படி பதினெட்டுத் தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18.5பே.) அல்லது 0.0468 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன், கம்பளைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்திலுள்ள உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவின் கடுக்கர இஹல கோறளேயில் கொப்பேவெலவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும், மரங்களுடனும், பயிர்களுடனும், மண்ணுடனும் மற்றும் எல்லாவற்றுடனும் வட்டகொடவத்த மறுபெயர் வட்டகொடஹேன எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியினதாய் (உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். ரீ. பீ. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, ஏப்பிறல் 8 ஆந் திகதிய 981 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1டீ என அடையாளமிடப்பட்ட காணித்துண்டாகவுள்ளதும்), உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். அபேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, யூன் 27 மற்றும் 18 எனத் தேதியிடப்பட்ட 1349 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 4 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 4 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டம் 3 ; கிழக்கில் : காணித்துண்டம் 2 ; தெற்கில் : காணித்துண்டம் 5ஏ மற்றும்; மேற்கில் : வீதி; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 1349 ஆம் இலக்க வரைபத்தின்படி இரண்டு தசம் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.9பே.) அல்லது 0.0073 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன், கம்பளைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

2. மேற்கூறப்பட்ட கிரிதலான கோறளையில் தொலஹாமுனவில் அமைந்துள்ளதும், பங்களாவத்த மறுபெயர் கோங்கஹாமுலவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். வெலகெதர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1974.03.02 ஆந் திகதிய 628 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 28 என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : சொல்லப்பட்ட

வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 26 மற்றும் 27 ; கிழக்கில் : திரு. விக்டருக்குச் சொந்தமானதும், சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ளதுமான காணித்துண்டம் 30 ; மற்றும் தெற்கிலும் மேற்கிலும் : நிமல் ஜயவீரவுக்குச் சொந்தமான அதே காணியின் எஞ்சியுள்ள பாகம்; பரப்பளவில் இது. இருபது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளது.

3. மேற்கூறப்பட்ட கிரிதலான கோறளையில் தொலஹாமுனவில் அமைந்துள்ளதும், பங்களாவத்த மறுபெயர் கோங்கஹாமுலவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். வெலகெதர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1974.03.02 ஆந் திகதிய 628 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 29 என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு – வடக்கிலும் கிழக்கிலும் : அதே காணியின் எஞ்சியுள்ள பாகம் ; தெற்கில் : ஹெட்டிபொலச் சந்தை அமைந்துள்ள காணியின் வேலி மற்றும் ; மேற்கில் : நிமல் ஜயவீரவுக்குச் சொந்தமான அதே காணியின் எஞ்சியுள்ள பாகம்; பரப்பளவில் இது. பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி.கூ. வர்தகன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-116/3

---

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"குருநாகல்லையைச் சேர்ந்த தன்தெனி தேவகே தமித் சுபசேன என்பவர், இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட் சார்பில் குருநாகல்லைச் பிரசித்த நொத்தாரிசு எவ். ஜே. சீ. டபிள்யூ. பெரேரா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, ஒற்றோபர் 15 ஆந் திகதிய 1867 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் மீது, வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளராதலாலும், 2009, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருநூற்று அறுபத்து மூன்று ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 3,99,263.67) கொண்ட தொகையும் 2009, யூன் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மூன்று இலட்சத்து அறுபதாயிரம் ரூபா (ரூ. 3,60,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தேழு வீத (27%) வட்டியும் சொல்லப்பட்ட முறி மீது சொல்லப்பட்ட தன்தெனி தேவகே தமித் சுபசேன என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருநூற்று அறுபத்து மூன்று ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 3,99,263.67) கொண்ட தொகை 2009, யூன் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மூன்று இலட்சத்து அறுபதாயிரம் ரூபா (ரூ. 3,60,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தேழு வீத (27%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 1867 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப் பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லா வற்றையும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலத் தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 1867 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள இஹல ஒத்தொட்ட கோறளையில் இல. 100 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மடஹாபொல கிராமத்தில் அமைந்துள்ளதும், அணுக்கணக் காணியென அழைக்கப்படுவதும், பிரிக்கப்பட்டதுமான அக்காணித் துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு – வடக்கில் : காணித்துண்டம் இல. 390 ; கிழக்கில் : காணித்துண்டங்கள் இல. 390 மற்றும் 393; தெற்கில் : காணித்துண்டம் இல. 238 மற்றும் ; மேற்கில் : நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட நில அளவைத் திணைக்களத்திலுள்ள 409 இன் 17 ஆம் இலக்க இறுதிக் கிராம வரைபடத்தில் காணித்துண்டம் ''389'' எனக் குறித்துக் காட்டப்பட்ட காணித்துண்டங்கள் இல. 388 மற்றும் 387; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள மரங்களுடனும், பயிர்களுடனும், கட்டிடங்களுட னும், வேறெல்லாவற்றுடனும் சைவர் தசம் ஏழு இரண்டு ஏழு (0.0727ஹெக்.) ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது.

அண்மைக்காலத்திய நிலஅளவையொன்றின்படி மேலேயுள்ள காணி பின்வருமாறு குறித்துக்காட்டப்படுகின்றது.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள இஹல ஒத்தொட்ட கோறளையில் இல. 100 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மடஹாபொல கிராமத்தில் அமைந்துள்ளதும், அணுக்கணக் காணியென அழைக்கப்படும், காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஈ. ஏ. ஜீ. எதிரிசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008.05.13 ஆந் திகதிய 208089 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 மற்றும் 2 எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு – வடகிழக்கில் : இகிவ 459 இலுள்ள காணித்துண்டம் 390 ; தென்கிழக்கில் : வீடுகளுக்கான வீதி ; தெற்கில் : வாவியிலிருந்து பிரதான வீதிவரையிலான வீதி மற்றும் ; மேற்கில் : இகிவ 480 இலுள்ள காணித்துண்டம் 387 மற்றும் இகிவ 409 இலுள்ள காணித்துண்டம் 388; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள மரங்களுடனும், பயிர்களுடனும்,

கட்டிடங்களுடனும், வேறெல்லாவற்றுடனும் ஒரு ஏக்கர் மூன்று றூட் ஏழு தசம் ஆறு சைவர் பேர்ச்சஸ்கள் (1ஏ. 3றூ. 7.60பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி.கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10–116/4

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

என். பி. வசந்த – கணக்கு இல: 0069 5000 3403

2008, செத்தெம்பர் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் –

"PQ 144 கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பிஎல்சி சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். ஜீ. டி. சுனாரி என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2007, ஓகத்து 18 ஆந் திகதிய 1633 ஆம் இலக்கம் கொண்ட அடகு பிணை மூலம் அடகு வைக்கப்பட்ட கீழ்கண்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சொத்துக்கள் காணிகளுடன் வழங்கப்பட்ட கடன் வசதிகளை கடமைப்பட்டவரான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு ஹோமாகம வளவ்வ வீதி, 415/8 இலக்கத்தைச் சேர்ந்த நாஒட்டுன்ன படால்கே லசந்த திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளமையால் 2008, யூலை 25 ஆந்திகதிக்கு ஒன்பது இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 9,84,347.64) கூறப்பட்ட அடகுப் பிணை உறுதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தத் தவறியுள்ள தால் குறிபிட்ட ஒன்பது இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 9,84,347.64) 2008, யூன் 26 ஆந் திகதி கூறப்பட்ட அடகு பிணை இலக்கம் 1633 இல் மேல் கட்டணம் செலுத்தி முடியும் வரை வருடத்துக்கு 23% வீத வட்டிக் கட்டணமாக ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா. 7,50,000) விளம்பரச் செலவுகள், மேலும் ஏதும் கொடுப்பனவுகள் இருப்பின் அவற்றையும் ஏதும் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிக் கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பிஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாவசம் கோரளை பள்ளேபத்து ஹோமகமை பிரதேச சபை எல்லைகளுக்குள் பிட்டிபன வடக்கில் அமைந்துள்ள "முத்தெட்டுவத்த" எனவழைக்கப்படும் காணியின் அனுமதிபெற்ற ஏலதாரர் பி. வெலிகல்ல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, பெப்புருவரி 15 ஆந் திகதியும் 892 இலக்கமும் கொண்ட வரைபடத்தில் துண்டு இல 01 எனக் குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லா பிரிவுகளும் கூறப்பட்ட காணித்துண்டு இல. 01 இவ்வெல்லை - வடக்கில் : வரைபட இலக்கம் 407 இலும் A ஆலும்; கிழக்கில் : பாதையாலும் (வரைபடம் இலக்கம் 395) மேலும் ஏ. ஏ. குனோரிஸ் என்பவராலர் கோரப்படுவது ; தெற்கில் : எம். டி. எல்பி நோனிஸால் என்பவரின் வயற்காணியிலும் மற்றும் ஏ. ஏ. ஏ. வீரசிங்க என்பவரால் கோரப்படும் காணியாலும் ; மேற்கில் : பிட்ட எல மற்றும் எம். டி. எல்பி நோனிஸால் உரிமை கோரப்படும் நெற்காணியாலும் சூழப்பட்டு 892 இலக்க வரைபடத்தில் குறிப்பிட்டவாறு பதினெட்டு தசம் ஒன்பது மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18.93பே.) விஸ்தீரணம் கொண்டதாக ஹோமாகம காணிப் பதிவகத்தில் போலியோ G 174/176 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

காணியின் மேல் பாதை அனைத்துடன் வரைபடம் இல. 395 இல் துண்டு இல. 01 குறிப்பிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10–179/6

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.*

ஓ. ரேணுகா – கணக்கு இல: 1069 5000 1545

2008, திசெம்பர் 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் –

"PQ 144 கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். அல்ஹேநரவினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, செத்தெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட அடகுப் பிணை உறுதி இல. 1032 இன் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்ட சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை கடன்பட்டார் என்ற வகையில் கடமைப்பட்டவரான இலங்கை சனநாயக சோசலசக் குடியரசின் ஹோமாகம ஸ்டேஷன் வீதி, 104/2 இல் ஒருவலகே ரேணுக்கா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால் கூறப்பட்ட அடகுப் பிணை உறுதியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் பன்னிரண்டு இலட்சத்து எண்பததேழாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று இரண்டு ரூபா ஒரு சதம் (ரூபா 12,87,392.01) 2008, ஒற்றோபர் 20 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீக்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட பன்னிரண்டு இலட்சத்து எண்பததேழாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று இரண்டு ரூபா ஒரு சதம் (ரூபா 12,87,392.01) 2008, ஒற்றோபர் 21 ஆந் திகதி முதல் இல. 1032 இன் மீது அறவிடப்படவேண்டிய மொத்தக் கட்டணத்தையும் செலுத்தித் தீர்க்கும் வரை ஒன்பது இலட்சத்து

அறுபத்திரண்டாயிரத்து இருநூற்று அறுபத்து மூன்று ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூபா 9,62,263.69) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1032 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவர் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பல்லே பத்து ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் பிட்டிபன வடக்கில் அமைந்த 'இந்திகஹா வெல்கும்புர எனும் இந்திகஹாவெல என்றழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. எச். எம். எல். பிரேமசந்திரவினால் தயாரிக்கப்பட்ட 2005, ஏப்பிறல் 05 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 4949 இல் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் ஏ என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : வரைபட இல. 269ஏ இன் லெட் 15 ; கிழக்கிற்கு : தற்போதுள்ள பாதை; தெற்கிற்கு : சுமனதாச தேவமுனி என்பவரின் காணி மற்றும் ; மேற்கிற்கு : பியசீலி பெரேராவின் காணி, ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட காணி. விஸ்தீரணம் பதினேழு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 17பே.) அத்துடன் அதற்குள் அமைந்த நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், உட்பட அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல பாதை உரிமைகள் ஏனைய சௌகரியங்கள் வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் மேலும் அதனுடன் தொடர்புடைய கிளைகளுடன் கூறப்பட்ட வரைபட இலக்கம். 4929 இற்கு அமைவானதாகும்.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் CDes குணதிலக்கவினால் தயாரிக்கப்பட்ட 1980, திசெம்பர் 07 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 783 இல் லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட பாதைக்கு ஊடாகவும் அதன் மீதுமான உரிமையுடன்.

கூறப்பட்ட லொட் ஏ. கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட வடக்குப் பிட்டிபனவில் அமைந்த 'இந்திகஹா வெல்கும்புர எனும் இந்திகஹாவெல' என்றழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். கே. குணவர்த்தனவினால் தயாரிக்கப்பட்ட 1993, யூன் 30 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 269ஏ இல் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 16 எனும் காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 15 ; கிழக்கிற்கு : லொட் 3 ; தெற்கிற்கு : லொட் 20 ; மேற்கிற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி. இவற்றை எல்லைகளாகக் கொண்ட காணியின் விஸ்தீரணம் பதினேழு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 17பே.) அத்துடன் அதற்குள் அமைந்த நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அமைந்த அனைத்துடன் சகல கூறப்பட்ட வரைபட இல. 269ஏ ஹோமாகம காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G1598/09 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-179/7

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

எம். டபிள்யூ. ஜே. எம். ஜீ. யூ. பீ. ஜயசுந்தர மற்றும் என். டபிள்யூ. எச். டீ. பிரதீப் - கணக்கு இல: 1021 5304 6128

2008, யூலை 24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

''கடப்பாடுடையவரான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, மஹஇலுப்பள்ளம, மஹஜன ஹாட்வெயார் இல் மல்வத்தே வளவ்வே ஜயசுந்தர முதியான்சேலாகே கயான் உத்பள பண்டார ஜயசுந்தர மற்றும் நாணயக்கார வசம் ஹபுகளகே தரங்க பிரதீப் தற்போது இபலோகம, கோனபத்திராவ, மஹஜன ஹாட்வெயார் இல் மல்வத்தே வளவ்வே ஜயசுந்தர முதியான்சேலாகே கயான் உத்பள பண்டார ஜயசுந்தர மற்றும் நாணயக்கார வசம் ஹபுளகே தரங்க பிரதீப் மேலும் மஹஇலுப்பள்ளம, மஹஜன ஹாட்வெயார் இல் மல்வத்தே வளவ்வே ஜயசுந்தர முதியான்சேலாகே கயான் உத்பள பண்டார ஜயசுந்தர ஈடுசெய்தவராக கம்பனி இல. பீகியூ 144 ஐக் கொண்ட 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ எனத் தற்போது அழைக்கப்படும் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஏ. வி. ஏ. திஸாநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, யூன் 14 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 4327 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2008, ஏப்பிறல் 14 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்கூறப்பட்ட முறி மூலம் சம்பத் வங்கி பீஎல்சீக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள ஒன்பது இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நாநூற்று இருபத்தெட்டு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூபா 9,46,428.42) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் சம்பத் வங்கி பீஎலசீ பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட இலங்கையில் பாவனையிலுள்ள நாணயத்திலான முழுத்தொகை ஒன்பது இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நாநூற்று இருபத்தெட்டு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூபா 9,46,428.42) ஐ 2008 ஏப்பிறல் 15 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை ஒன்பது இலட்சம் ரூபா (ரூபா 9,00,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினேழு (17%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச்செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 4327 ஐக் கொண்ட ஈட்டுமுறி மூலம் சம்பத் வங்கி பீ்லசீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாபதி அவர்களால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன்மூலம் அறிவிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுநுவர இன் மெத பளாத்த இல் பம்பரதெனியவில் அமைந்த ''மொரண்தென்னஹேன எனும்

மொரணதென்ன'' என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் இந்திரவண்ஸ தென்னகோன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2001, யூன் 25 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 251 இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு 3 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் சகலதுடன். மேலும் மேற்கூறப்பட்ட காணிக்குரிய வழி வசதிகள், உரிமைகள், மற்றும் சலுகைகள் சகலதுடன். மேற்கூறப்பட்ட துண்டு 3 இன் எல்லைகளாவன - வடக்கில் : வட்டதெனிய இருந்து தாவுலகள வரையான பிரதான வீதி; கிழக்கில் : நிலஅளவை வரைபடம் இல. 251 இல் துண்டு 4 மற்றும் 5 ; தெற்கில் : பீ. பம்பரதெனியவின் காணி மற்றும் ; மேற்கில் : நிலஅளவை வரைபடம் இல. 251 இல் துண்டு 2 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம்இல. 251 இற்கமைய இந்தக் காணி முப்பத்தைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கண்டி காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் C 369/213 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-179/8

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

சமனல நிஷ்பாதன - கணக்கு இல: 0060 1000 0694

2007, ஏப்பிறல் 26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் விசேட மாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

''கடப்பாடுடையவரான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் வேபோட, வேபோட தெற்கு, இல. 16/B இல் "சமனல நிஷ்பான" எனும் பெயர் மற்றும் மகுடத்தின் கீழ் உரிமையாளராக வியாபாரம் நடத்தும் மேற்கூறப்பட்ட குடியரசில் வேபோட, வேபோட தெற்கு இல. 16/B இல் ஜயசிங்க முதியான்சேலாகே விமலசிரி ஜயசிங்க வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு டி. எம். ஆர். சேனாநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, ஓகத்து 25 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 94 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால், 2007, பெப்புருவரி 21 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள ஆறு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எண்ணூற்று இருபத்தேழு ரூபா பன்னிரண்டு சதம் (ரூபா 6,57,827.12) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பீஎலசீ பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட தொகை ஆறு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எண்ணூற்று இருபத்தேழு ரூபா பன்னிரண்டு சதம் (ரூபா 6,57,827.12) ஐ 2007 பெப்புருவரி 22 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை மூன்று இலட்சத்து முப்பத்தோராயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று எட்டு ரூபா மூன்று சதம் (ரூபா 3,31,998.31) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினைந்து (15%) சதவீத வட்டியுடன் மேலும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 2,50,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து (15.5%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச்செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 94 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன்மூலம் அறிவிக்கப்படுகின்றது.''

#### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளையின் அதிகாரி பத்து இல் மஹர பிரதேச சபை எல்லையினுள் வேபொட இல் அமைந்த கஹட்டகஹவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எம். லீலாரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2004, மாச்சு 22 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 76/2004 இல் குறிப்பிடப்பட்டு துண்டு A என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் சகலதுடன். மேலும் இந்தக் காணிக்கு சொந்தமான வழி வசதிகள், உரிமைகள் மற்றும் சகல சலுகைகளுடன். மேற்கூறப்பட்ட துண்டு A இன் எல்லைகளாவன - வடக்கில் : ஜே. எம். டபிள்யூ. ஜயசிங்கவின் காணி ; கிழக்கில் : பிரதேச சபை ரோட் ; தெற்கில்: று. ஆ. டீ. வீரசூரியவின் காணி ; மற்றும் மேற்கில் : லயனல் முனசிங்கவின் காணி என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 76/2004 இற்கமைய இந்தக் காணி இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் B 928/80 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட துண்டு A கீழ் விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவையாகும்.

மேற்கூறப்பட்ட வேபொட இல் அமைந்த கஹட்டகஹவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. வீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1982, செத்தெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1557C இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1B1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் சகலதுடன். மேற்கூறப்பட்ட துண்டு 1B1 இன் எல்லைகளாவன - வடக்கில் : எஸ். ஏ. வீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1557B இல் துண்டு 1A ; கிழக்கில் : கிராம சபை ரோட் ; தெற்கில் : நிலஅளவை வரைபடம் இல. 1557B இல் துண்டு 1B; மற்றும் ; மேற்கில் : இதே காணியின் மிகுதிப் பாகம் என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1557C இற்கமைய இந்தக் காணி இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் C 681/53 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-179/9

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

எல். ரீ . ஜயசிங்க மற்றும் எஸ். ஓ. லெப்ரோய் - கணக்கு இல: 1061 5324 6330

2009, யூலை 31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். எஸ். கலன்சூரிய என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007 மாச்சு 09 ஆந் திகதியிடப்பட்ட இல 639 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் லக்மினி தரிந்து ஜயசிங்ஹ மற்றும் ஷட்ரெச் ஒன்ரே லெப்ரோய் என்வர்களில் கடன்பட்டவர் என்ற வகையில், லக்மினி தரிந்து ஜயசிங்ஹ என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால் கூறப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் முப்பத்து நான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூபா 34,32,828.97) 2009, யூன் 19 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீக்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட முப்பத்து நான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூபா 34,32,828.97) 2009, யூன் 20 ஆந் திகதி முதல் இல 639 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை செலுத்தித் தீர்க்கும் திகதி வரை முப்பத்து இரண்டு இலட்சத்து எழுபதாயிரத்து தொளாயிரத்து அறுபத்தொரு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூபா 32,70,961.94) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 639 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவர் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லேபத்துவின் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைகளுக்குள் பொரலஸ்கமுவையில் அமைந்த அங்கமைந்த நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர வழி உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் தெனவக்க வளவ்வத்தை என்றழைக்கப்பட்ட காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. எம். ஏ. எச். பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, யூன் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1992 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 10 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 11; கிழக்கிற்கு : லொட் 8 (20 அடில அகல வீதிக்கான ஒதுக்கம்) ; தெற்கிற்கு : லொட் 9 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 12 (பாதைக்கு ஊடான ஒதுக்கம்) இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஏழு தசம் இரண்டு சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7.20பே.) கூறப்பட்ட இல. 1992 எனும் வரைபடத்திற்கு அமைவான கல்கிஸ்ஸை காணிப் பதவகத்தில் பரிமாணம்/பக்கம் M2854/232 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இல. 1992 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 8 ஊடாக மற்றும் வழி ஊடாகவும் அதன் மீதுமான வழி உரிமையுடன்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-179/10

---

**சம்பத் வங்கி பீ. எல். சீ,**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 1038 5325 1660 - டி. எம். யூ. எஸ். டி. உடகெதர மற்றும் பீ. டீ. பீ. வணிகரத்ன

2008, மே 08 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது :-

''இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, டீதவகல, கள்தளாவ, இல. 176 இல் ''உடகெதர நிவாஸ'' இல் தேவகே முதியான்சேலாகே உடகெதர சம்பத் திஸாநாயக்க உடகெதர மற்றும் தேவகல கன்தளாவ இல. 163 இல் பம்பரந்தே டொன் பிரேமலதா வணிகரத்ன கடப்பாடுடையவர்களாக மேலும் கூறப்பட்ட தேவகல, கள்தளாவ, இல. 163 இல் பம்பரந்தே டொன் பிரேமலதா வணிகரத்ன ஈடசெய்தவராக வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஜே. பண்டார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, மே 16 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1287 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2008, மாச்சு 04 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்கூறப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள நான்கு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று பதினைந்து ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூ. 4,39,515.34) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவு முள்ளதாதலாலும் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, சொல்லப்பட்ட இலங்கையில் பாவனையிலுள்ள நாணயத்திலான முழுத்தொகை நான்கு

இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று பதினைந்து ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூ. 4,39,515.34) ஐ 2008, மாச்சு 05 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை நான்கு இலட்சத்து பதினேழாயிரத்து அறுநூற்று மூன்று ரூபா ஆறு சதம் (ரூ, 4,17,603.06) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினாறு (16%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 1287 ஐக் கொண்ட ஈட்டு முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவயைாளர் பீ. கே. ஈ. சேனாபதி அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவில் ஜயபுர கிராம சேவை அலுவலரின் பிரிவில் எகொட பத்துவில் கல்தளாவ கிராமத்தில் அமைந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. முதுன்கொத்கே அவர்களால் தயாரிக்கப்பட்டு 2007, பெப்புருவரி 10 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2060 இல் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் சகலதுடன். மேலும் மேற்கூறப்பட்ட காணிக்குரிய வழி, வசதிகள், உரிமைகள், மற்றும் சலுகைகள் சகலதுடன், மேற்கூறப்படட துண்டு 1A1 இன் எல்லைகளாவன - வடக்கில் : F.C.P.Po 400 இல் துண்டுகள் 161 மற்றும் 157 ; கிழக்கில் : F.C.P.Po 400 இல் துண்டுகள் 157 மற்றும் 163 ; தெற்கில் : F.C.P.Po 400 இல் துண்டுகள் 163 மற்றும் 158 மற்றும் ; மேற்கில் : F.C.P.Po 400 இல் துண்டுகள் 158 மற்றும் 161 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 2060 இற்கமைய இந்தக் காணி பூஜ்ஜியம் தசம் இரண்டு பூச்சியம் நான்கு ஹெக்டயார் (0.204 ஹெக்.) அல்லது இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடையது.

மேற்கூறப்பட்ட துண்டு 01 கீழே விபரிக்கப்பட்ட ஒரு மீள் அளவையாகும்.

மேற்கூறப்பட்ட கல்தளாவ கிராமத்தில் அமைந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. F.C.P.Po 400 இல் துண்டு 162 என அடையாளமிடப்பட்ட பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் சகலதுடன். மேலும் மேற்கூறப்பட்ட காணிக்குரிய வழி, வசதிகள், உரிமைகள், மற்றும் சலுகைகள் சகலதுடன், மேற்கூறப்படட துண்டு 162 இன் எல்லைகளாவன - வடக்கில் : F.C.P.Po 400 இல் துண்டுகள் 161 மற்றும் 157 ; கிழக்கில் : F.C.P.Po 400 இல் துண்டுகள் 157 மற்றும் 163 ; தெற்கில் : F.C.P.Po 400 இல் துண்டுகள் 158 மற்றும் 163 மற்றும் ; மேற்கில் : F.C.P.Po 400 இல் துண்டுகள் 158 மற்றும் 161 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. F.C.P.Po 400 இற்கமைய இந்தக் காணி பூஜ்ஜியம் தசம் இரண்டு பூச்சியம் நான்கு ஹெக்டயார் (0.204 ஹெக்.) அல்லது இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி பொலன்னறுவை காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் L. D. O. 6/3/ 2/128 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

10-183

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏறபாடுகள்) சட்டத்தின் 04ம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

தெல்கொட கிளை - தேவசிங்க ஹன்கிலிகெதர ஜயவர்தனா மற்றும் தேவநாராயண ஹித்தர கெதர டுலீப் ரங்கஜீவ ஜயவர்தனா

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால், 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

'' தேவசிங்க ஹன்கிலிகெதர ஜயவர்தனா மற்றும் தேவநாராயண ஹித்தர கெதர டுலீப் ரங்கஜீவ ஜயவர்தனா கடப்பாடு உடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். டபிள்யூ. ராஜகருவணாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.11.10 மற்றும் 23.03.2007 ஆந் திகதிகள் இடப்பட்ட 24420 மற்றும் 24810 ஆம் இலக்க முறிகள், மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009 யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது முப்பத்து மூன்று இலட்சத்து முப்பத்தைதைந்தாயிரத்து எண்பது ரூபா பத்து சதம் (ரூபா 33,35,080.10) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 24420 மற்றும் 24810 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 33,35,080.10 பணத்தொகை 2009, ஓகத்து 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஈ. எஸ். ராமநாயக்க என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் ாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரிப் பற்றுவில் உள்ள நாரன்வெலவின் இற்றேகலலந்த என் அழைக்கப்படும் 22.01.2006 ஆந் திகதியிடப்பட்ட 1858 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், ஆனால் மேலதிகமாக சரியான முறையில் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். எல். டீ. சில்வாவினால் 23.01.2006 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு '1ஏ' என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : இற்றேகலலந்த வீதி ; கிழக்கு: காணித்துண்டு 1பி ; தெற்கு : தேவிகா வீரசிங்கவினால் உரிமை கோரப்படும் இந்த காணியின் மிகுதி ; மேற்கு : வீதி (வெந்தசிவத்தயில் இருந்து வீதிக்குச் செல்லும்) அத்துடன் இருபத்து இரண்டு தசம் ஒன்பது மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ.

22.93பே.) அல்லது 0.0580 ஹெக்டயார் விஸ்தீரணத்துடன் கட்டடங்கள், மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் அதில் உள்ள எல்லாவற்றையும் கொண்டுள்ள ஆதனம். அத்துடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதியின் பக்கம் சீ 774/84 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வரைபட இலக்கம் 1858 இற்கு அமைவாக பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

10-216/3

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கட்டுநாயக்க கிளை) — ஜயசூரிய ஆராச்சிகே ரோஹண ஜயசூரிய

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''ஜயசூரிய ஆராச்சிகே ரோஹண ஜயசூரிய கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கியூ. ரீ. திசேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, மாச்சு 06 ஆந் திகதியிடப்பட்ட 5265 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும் 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது நான்கு இலட்சத்து பதினாறாயிரத்து நாநூற்று தொண்ணூற்று எட்டு ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூபா 4,16,498.72) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 5265 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 4,16,498.72 பணத்தொகையை 2009, ஓகத்து 01 ஆந் திகதியிலிருந்து அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் பியரத்ன முதுகுமாறனவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பள்ளே பற்றுவின் அத்துகிரியவில் உள்ள குறுப்பு அச்சிய முக்கலன என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ விஜயசூரியவினால் தயாரிக்கப்பட்ட 1983, ஏப்பிறல் 24 ஆந் திகதியிடப்பட்ட 1945 இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு சீ என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : இந்த நிலஅளவை வரைபடத்தின் காணித்துண்டு பி ; கிழக்கு : ஏ. ஏ. ஜோன் சிங்ஹோவின் காணியைப் பிரிக்கும் வேலி ; தெற்கு: ஏ. ஏ. ஜோன் சிங்ஹோ மற்றும் டெபா எலவினது காணி ; மேற்கு : வீதிக்காக ஒதுக்கீடு காணித்துண்டு எவ். மற்றும் ஊ. அத்துடன் பதினேழு தசம் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17.4பே.) விஸ்தீரணத்துடன் எல்லாவற்றையும் கொண்டதும், ஹோமாகம காணிப் பதிவகத்தில் பீ 596/110 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான காணித்துண்டு.

அத்துடன் ஹோமாகம காணிப் பதிவகத்தில் பீ 1519/155 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட 15 அடி அகலமான வீதிக்கான காணித்துண்டு எப். இன் முழு அளவிலான சுதந்திரமான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/2

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏறபாடுகள்) சட்டத்தின் 04ம் பிரிவின் கிழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

நிட்டம்புவ கிளை - கொட்டயாலகே காமினி சரத் விஜேசிங்க மற்றும் கொட்டயாலகே ஹராமணிஸ்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால், 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்:

''கொட்டயாலகே காமினி சரத் விஜேசிங்க மற்றும் கொட்டயாலகே ஹராமணிஸ் கடப்பாடு உடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பி. என். ஏக்கநாயக்க என்பவரால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, மே 12 ஆந் திகதியிடப்பட் 3707 இலக்க மற்றும் 2004 ஓகத்து 11 ஆந் திகதிய 4471 ஆம் இலக்க முறிகள் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009 யூலை 03 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஒரு இலட்சத்து இருநூற்று எண்பத்தொரு ரூபா பதினேழு சதம் (ரூபா 1,00,281.17) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம்

இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 3707 மற்றும் 4471 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,00,281.17 பணத்தொகை 2009, ஓகத்து 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோறளையின் ஓட்டறபற்றுவில் வறக்காபொல பிரதேச சபை எல்லைகளுக்குள் றாகலகந்த என்னுமிடத்தில் அமைந்துள்ளதும், ''பஸ்பொலகந்த'' என அழைக்கப்படும் காணியிலிருந்து நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்படட 1, 23/21, 29 ஆம் இலக்கக் களத்தாளில் A267 ஆம் இலக்க பூர்வாங்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டுகள் 111 மற்றும் 112 அடையாளமிடப்பட்டிருக்கும் அப்பிரிக்கப்பட்ட மற்றும் நிர்ணயிக்கப் பட்ட காணித்துண்டு முழுவதும், அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டுகள் 111 மற்றும் 112 இன் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 110 ; கிழக்கு : பாதையொன்றுக்கான ஒதுக்குகை மற்றும் காணித்துண்டு 113 ; தெற்கு : காணித்துண்டுகள் 124 மற்றும் 125 அத்துடன் ; மேற்கு : காணித்துண்டு 110. அத்துடன் கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் R 6728 என்னும் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதும், சொல்லப்பட்ட பூ. வரைபடத்தின் பிரகாரம் ஒரு ஏக்கர், இரண்டு றூட்கள் முப்பத்திரண்டு பேர்ச்சஸ்கள் (1ஏ. 2றூ.32பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

10-216/4

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கண்டி கிளை) - திலீப்ப சமரவீர

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையினால், 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானமாவது-

திலீப்ப சமரவீர கடப்பாடு உடையவர் கொடுப்பனவில் தவறியுள்ளார். கண்டி பிரசித்த நொத்தாரிசு கே. எஸ். பீ. விஜயரட்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, பெப்புருவரி 21 ஆந் திகதியிடப்பட்ட 1300 இலக்க முறி, (இத்துடனான முதலாவது அட்டவணையில் ஆதனம் குறித்து மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது) மீதான வருமதியான கொடுப்பனவு, 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட இருபத்து எட்டு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருபத்தொன்பது ரூபா அறுபத்து மூன்று சதம் (ரூபா 28,29,029.63) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும்,

அத்துடன் கண்டி பிரசித்த நொத்தாரிசு எச். பி. ரண்வலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, யூலை 7 ஆந் திகதியிடப்பட்ட 229 ஆம் இலக்க முறி, (இத்துடனான இரண்டாவது அட்டவணையில் ஆதனம் குறித்து மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது) மீதான வருமதியான கொடுப்பனவு, 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு பதினொரு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து ஏழு ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூபா 11,89,907.44) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும்,

அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான முதலாவது மற்றும் இரண்டாவது அட்டவணைகளில் முழுமையாக விவரிக்கப்பட்ட 1300 மற்றும் 229 ஆம் இலக்க முறிகள், மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 40,18,937.07 பணத்தொகையை 2008, நவெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.''

**முதலாவது அட்டவணை**

இலங்கை குடியரசின் மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்ததும்பறவின் உடகம்பஹா கோறளவின், நத்தறம்பொத்தவில் உள்ள பண்டிவத்த மற்றும் கஹாவத்த, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் என். பி. டி. வெத்தவவினால் தயாரிக்கப்பட்ட 1991, ஏப்பிறல் 6 ஆந் திகதியிடப்பட்ட 1133 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள் காணித்துண்டு 1 என அடையாள மிடப்பட்டதும், பகிரப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : வீதி ; கிழக்கு : சந்திரசேகரவினால் உரிமை கோரப்படும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். தல்வத்தவினால் தயாரிக்கப்பட்ட 1958, திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட 439 ஆம் இலக்க வரைபடத்திலும் உள்ள காணித்துண்டு 180; தெற்கு : வரைபட இலக்கம் 439 இன் காணித்துண்டு 18சீ யின் மிகுதியான பகுதி ; மேற்கு : வரைபட இலக்கம் 439 இன் 18சீ, காணித்துண்டின் மிகுதியான பகுதியும். கண்டி காணிப்பதிவகத்தில பக்கம் ஈ578/ 16 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட

பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

**இரண்டாவது அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹரிஸ்பற்று குலுகமன சியப்பற்றுவில் உள்ள யட்டிஹலகல உடாகம அல்லது யட்டிஹலகல வில் உள்ள, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. கே. டி. ஜே. எஸ். கே. சிரிவர்தனவினால் தயாரிக்கப்பட்ட 2004, செத்தெம்பர் 8 ஆந் திகதியிடப்பட்ட 1424 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 3 என அடையாளமிடப்பட்ட மஹாவத்த கெதறவத்த எனப்படும் பகுதி பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : எல்லை வேலியும் ஒற்றையடிப்பாதையும் ; கிழக்கு : பக்கலாவல அல்லது அல என்னும் மருத்தேலிஸ் இற்குச் சொந்தமான இடம் ; தெற்கு : யகலத்தென்னவில் இருந்து கன்னொருவ செல்லும் வீதி ; மேற்கு : காணித்துண்டு 1 அத்துடன் முப்பத்து ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 39பே.) காணி உடனான எல்லாவற்றையும் உள்ளடக்கிய விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம். கண்டி காணிப் பதிவகத்தில் எச். 766/104 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

9-216/14

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(துலங்கமகிளை) —

குடாகொட போப்பஆராச்சிகே பிரியந்த, சமன் குமார போப்பஆராச்சி மற்றும் கெஹல்கொட்டுவ முதியன்சலாகே புஷ்பா குமாரி விஜயபண்டார

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" குடாகொட போப்பஆராச்சிகே பிரியந்த, சமன் குமார போப்பஆராச்சி மற்றும் கெஹல்கொட்டுவ முதியான்சேலாகே புஷ்பா குமாரி விஜயபண்டார கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். மொஹோட்டியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, செத்தெம்பர் 07 ஆந் திகதியிடப்பட்ட 3468 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும் 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது பதினொரு இலட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று பத்து ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 11,09,210.89) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 3468 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 11,09,210.89 பணத்தொகையை 2009, ஓகத்து 01 ஆந் திகதியிலிருந்து அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். ஈ. எஸ். ராமநாயக்கவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பள்ளே பற்று, கடுவெல பிரதேச சபையின், கடுவெல பகுதியின் மாலபேயின் அத்துருகிரிய வீதியின், 956/1 வரிமதிப்பீட்டிலக்கத்தில் உள்ள தெல்கஹாலந்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையார் எம். டபிள்யூ. தேபுலங்கொடவினால் தயாரிக்கப்பட்ட 2002, திசெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட 1487 இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு ஏ2 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப் பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு ஏ1 ; கிழக்கு : ஏ. எல். டீ. ஆரியரட்னவின் காணி ; தெற்கு : பீ. டீ. சுமணாவதியின் காணி ; மேற்கு : வீதி மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1487 இற்கு அமைவானதும் ஹோமாகம காணிப் பதிவகத்தில் ஜீ 1428/192 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒன்பது தசம் ஐந்து ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 9.55பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. தேபுலன்கொடவினால் 2002, திசெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட 1487 இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதற்கமைய பாதையுரிமை ஒதுக்கீடும் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/15

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏறபாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கொட்டாஞ்சேனை கிளை - அருளானந்தசிவம் சூரசங்காரசிவம் மற்றும் சூரசங்காரசிவம் சுமதி

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால், 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியன்று

கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"அருளானந்தசிவம் சூரசங்காரசிவம் மற்றும் சூரசங்காரசிவம் சுமதி என்போர் கடப்பாடு உடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹல்லோலுவவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, செத்தெம்பர் 21 மற்றும் 24.11.2005 ஆந் திகதிய முறையே 1452 மற்றும் 1510 ஆம் இலக்க இரு முறிகள், மீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009 யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது நாற்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூறாயிரத்து தொளாயிரத்து நாற்பத்து மூன்று ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூபா 44,90,943.69) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1452 மற்றும் 1510 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 44,90,943.69 பணத்தொகை 2009, ஓகத்து 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஈ. எஸ். ராமநாயக்க என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (ஆனால் கொழும்பு பிரிவிற்குள்) அளுத்குறுகோறளையின் றாகம்பற்றுவில் வத்தளைப் பிரதேச சபையின் ஹெந்தளை உப அலுவலக எல்லைக்ளுக்குள் ஹெந்தளை என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் தயா வீதி, 31/D என்னும் வரிமதிப்பீட்டுஇலக்கத்தைக் கொண்டதும் கடவத்தை, கஜுகஹவத்தை, தவட்டகஹாவத்தை, ஹெதவக்க கஹவத்தை, தேலம்பு கஹவ கும்புற மற்றும் கொறக்காகஹவத்தை என அழைக்கப்படும். காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் என். ஹேரத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, பெப்புருவரி 17 ஆந் திகதிய 2004/ 49 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 5 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாமும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 5 இன் எல்லைகள் - வடக்கு : எல மற்றும் பென்ஸ் என்பவரால் உரிமைகோரப்படும் நெல் வயல் ; கிழக்கு : பென்ஸ், லியனகே என்போரால் உரிமைகோரப்படும் நெல்வயல் மற்றும் காணித்துண்டு R2 (15 அடி அகல வீதி) ; தெற்கு : லியனகே என்பவரால் உரிமை கோரப்படும் நெல்வயல், காணித்துண்டு R2 (15 அடி அகல வீதி), மற்றும் காணித்துண்டு D1 (வடிகாலுக்கான ஒதுக்குகை) அத்துடன் ; மேற்கு : காணித்துண்டு D1 (வடிகாலுக்கான ஒதுக்குகை) மற்றும் எல. அத்துடன் சொல்லப்பட்ட 2004/49 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 9பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

1452 மற்றும் 1510 ஆம் இலக்க சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள வீதிக்கான ஒதுக்குகைகளின் மீதும் அதன் வழியாகவும் உள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

9-216/16

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.**
(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏறபாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கிழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

மொரட்டுமுல்ல கிளை - ஹெவ்-வுட் இண்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால், 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"ஹெவ்-வுட் இண்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு உடையதாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் மொரட்டுவை பிரசித்த நொத்தாரிசு என். ஜே. பர்ணான்டோவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, மாச்சு 24 ஆந் திகதியிடப்பட் 7366 இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009 யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்தாறு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நாநூற்று இருபத்துமூன்று ரூபா இரண்டு சதம் (ரூபா 56,24,423.02) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 7366 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 56,24,423.02 பணத்தொகை 2009, ஓகத்து 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எச். தளுவத்தவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரெய்கம் கோறளை, அதிகாரி பற்று, பண்டாரகம பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கின்டெல்பிட்டியவில் உள்ள மில்லகஹாலந்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. டீ. பி. விஜயரட்னவினால் தயாரிக்கப்பட்ட 1992, மே 30 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2/92 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு பி என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு ஏ ; கிழக்கு: லீலாவதியினாலும் மற்றும் ஏனையவர்களாலும் உரிமை கோரப்படும காணி ; தெற்கு : வரைபட இலக்கம் 725 இல் உள்ள காணத்துண்டு 3 ; மேற்கு : வரைபட இலக்கம் 725 இல் உள்ள காணித்துண்டு 1 அத்துடன். ஹொறணை காணிப் பதிவகத்தில் பி 136/65 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணம் கொண்ட காணி.

2. கின்டெல்பிட்டியவில் அமைந்துள்ள மில்லகஹாலந்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. தெரணியகலவினால் தயாரிக்கப்பட்ட 1992, மே 05 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 725 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 3 என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டுகள் 1 மற்றும் 2 ; கிழக்கு : எல். லீலாவதியினாலும் மற்றும் ஏனையவர்களாலும் உரிமை கோரப்படும் காணி ; தெற்கு : வரைபட இலக்கம் 696 இல் உள்ள காணத்துண்டு ஏ2 ; மேற்கு : டெய்மன் பீரிசினால் உரிமை கோரப்படும் காணி. அத்துடன் இருபத்து ஐந்து தசம் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25.7பே.) விஸ்தீரணம் கொண்ட காணியுடனான அனைத்தையும் உள்ளடக்கிய ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

10-216/11

---

### மக்கள் வங்கி- தங்காலை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தல் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2008.10.24 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது;-

"தங்காலை பிரசித்த நொத்தாரிசு பி. எம். டி. குமுதுனி என்பவரால் 2007.11.16 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் இலக்கம் 2595 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் கொடுப்பனவில் மிடிதொட ஹேவாகே கிரேசன் என்பவர் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் ரூபா (ரூ. 2,90,000) மக்கள் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2008.05.21 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 27 வீதப்படி இரண்டு இலட்சத்து தொண்ணூராயிரம் ரூபா (ரூ. 2,90,000) பணம் ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) 29 எல் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து இரண்டு இலட்சத்து தொண்ணூராயிரம் ரூபா (ரூ. 2,90,000) பணம் அறவிடுவதற்காக மாத்தறை உத்தரவுபெற்ற ஏலதாரர ஜீ. பி. ஆனந்த என்பவரால் இலக்கம் 2595 என்ற ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் பணிப்பாளர் இத்தால் தீர்மானித்துள்ளது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், தெற்கு கிருவா பத்துவே கதுருபொகுன வீதியில் அமைந்திருக்கும் கிருளவெல்ல என்ற காணியின் இலக்கம் 33 என்ற துண்டுக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. வரினகுலசூரிய என்பவரால் இலக்கம் 531 மற்றும் 1985.11.14 ஆந் திகதிய வரைபடத்தின் பிரித்து வேறாக்கிய இலக்கம் 33ஏ என்ற வடக்குக்கு : இலக்கம் 320 இன் லொட் இலக்கம் 63 என்ற வீதியும்; கிழக்கிற்கு : இக் காணியின் இலக்கம் 33பீ என்ற துண்டும் ; தெற்கிற்கு : மெதபொதுனவத்தையும் ; மேற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 29 என்ற துண்டும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விசாலம் கொண்ட இக்காணி மீண்டும் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எச். ஸிரிபத்தனகே என்பவரால் 2007.08.05 ஆந் திகதி அளந்து தயாரித்த 3577 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கிய ஏ எழுத்துடைய அதன் வரைபடத்தின் பிரகாரம் எல்லைகள் - வடக்குக்கு : இலக்கம் 320 என்ற வரைபட இலக்கம் 63 என்ற கதுரபொகுன வீதியில் இருந்து பிரதான வீதி வரைக்கும் இருக்கும் வீதியும் ; கிழக்கிற்கு : இலக்கம் 531 என்ற வரைபட இலக்கம் 33B என்ற துண்டும் ; தெற்கிற்கு : மெதபொதுனவத்தையும் ; மேற்கிற்கு : இலக்கம் 320 என்ற வரைபட இலக்கம் 29 என்ற துண்டும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக்கும் கட்டடங்கள், மரம், மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணி தங்காலை மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் எப் 115/205 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
ஹம்பாந்தோட்டை.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 07, டவர்ஹில் வீதி,
ஹம்பாந்தோட்டை.

10-162

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நித்தம்புவ கிளை) — வணிகசேகர ஆராச்சிகே சிசர குமார.

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"வணிகசேகர ஆராச்சிகே சிசிர குமார, கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். ஜே. அத்தப்பத்துவினால் முறையே அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1997, செத்தெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட 7162 ஆம் இலக்க முறி, 2003, யூன் 24 ஆந் திகதியிடப்பட்ட 9020 ஆம் இலக்க முறி, 2004 நவெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட 9394 ஆம் இலக்க முறி, மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, சனவரி 5 ஆம் திகதியிடப்பட்ட 5885 ஆம் இலக்க முறிகள் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளமையாலும் 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்குச் சொல்லப்பட்ட முறி மீது ரூ.6,83,181.92 கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும், உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 7162,9020, 9394 மற்றும் 5885 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 6,83,181.92 கொண்ட பணத்தொகையை 2009, ஓகத்து 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால், பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறள, உடுகஹாப்பற்று, அத்தனகல பிரதேச சபையின், ஈகொடபொத்த உபகாரியாலய பிரிவினுள் உள்ள மெய்ம்புலவில் உள்ள "வனுவாகல எஸ்ரேற்" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. எச். ஈ. மெண்டிசினால் தயாரிக்கப்பட்ட 10.01.1976 ஆம் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 242 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 76, என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆனத்தின் எல்லைகள்- வடக்கு : காணித்துண்டு 206 (வீதிக்கான ஒதுக்கீடு) ; கிழக்கு : காணித்துண்டு 75 ; தெற்கு : காணித்துண்டு 79 ; மேற்கு : காணித்துண்டு 77; அத்துடன் வரைபட இலக்கம் 242 இற்கு அமைவான ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமானதும் கம்பஹா மாவட்ட காணிப்பதிவகத்தில் எப். 185/130 என்ற தலைப்பின் பதிவு செய்யப்பட்டதுமான ஆதனதம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/5

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(ஹோமாகம கிளை) — கனிஷ்க கயா வித்தாரண.

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"கனிஷ்க கயா வித்தாரண, கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். மொஹோட்டியினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, செத்தெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட 2472 ஆம் இலக்க முறி, மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. சேனாநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, சனவரி 8 ஆந் திகதியிடப்பட்ட 1367 ஆம் இலக்க முறிகள் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளமையாலும் 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்குச் சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்தாறு இலட்சத்து அறுபது ஆயிரத்து நூற்று பதின்மூன்று ரூபா அறுபத்திமூன்று சதம் (ரூ. 56,60,113.63) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும், உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், குறிப்பிட்ட 2472 மற்றும் 1367 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 56,60,113.63 கொண்ட பணத்தொகையை 2009, ஓகத்து 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தளுவத்தவினால், பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், (கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளை பள்ளேப்பற்று, மஹரகம நகர சபைக்கு உட்பட்ட நாவின்னவின்

சுச்சரித்த வீதியின் வரிமதிப்பிலக்கம் 82/1 ஐக் கொண்டுள்ள "பண்டாரவில கும்புற" என அழைக்கப்படும் காணி, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பி. யூ. எஸ். பர்னாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 2003, ஒகத்து 3 ஆந் திகதியிடப்பட்ட 735 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதும், காணித்துண்டு 13 என அடையாளம் இடப்பட்டது மான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதுமான ஆதனத்தின் எல்லைகள்- வடக்கு : காணித்துண்டு 27 மற்றும் வரைபட இலக்கம் 2000/180 இல் உள்ள மிகுதியான காணித்துண்டு 3; கிழக்கு : வரைபட இல. 2000/180 இல் உள்ள மிகுதியான காணித்துண்டு இல. 3 ; தெற்கு : காணித்துண்டுகளான 14 மற்றும் 15 மேற்கு : காணித்துண்டு 26 உம், கல்கிசை காணிப்பதிவகத்தில் எம் 2692/37 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதும், வரைபட இலக்கம் 735 இற்கு அமைவான ஏழு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணமுள்ள ஆதனம். அத்துடன் முறி இலக்கம் 2472 மற்றும் 1367 இல் விவரிக்கப்பட்ட அட்டவணையின்படி பாதைக்கான உரித்தையும் கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/9

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(ஹோமாகம கிளை) — சங்கீதிக்கா பிரசாதினி வித்தாரண.

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"சங்கீதிக்கா பிரசாதினி வித்தாரண கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ. என். பி. பெரேராவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, மே 10 ஆந் திகதியிடப்பட்ட 1998 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்குச் சொல்லப்பட்ட முறி மீது பதினைந்து இலட்சத்து ஐம்பத்தியாறாயிரத்து நூற்றிதொண்ணூற்றியாறு அறுபத்திமூன்று சதம் (ரூ. 15,56,196.63) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும், உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1998 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 15,56,196.63 கொண்ட பணத்தொகையை 2009, ஒகத்து 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தளுவத்தவினால், பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

வட மேல் மாகாணம், (கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறள, பள்ளே பற்றுவில் உள்ள ஹோமாகம பிரதேச சபைக்கு உட்பட்ட ஹோமாகமவில் உள்ள உடாகெதரவத்த, தெல்கஹாவத்த மற்றும் கனகராயவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம். எம். எஸ். பர்ணான்டோவினால், தயாரிக்கப்பட்ட 2006, மே 6 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1221 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2ஏ என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள்- வடக்கு : நகரசீமா மாவத்தை (20 அடி அகலமானது) ; கிழக்கு : வரைபட இலக்கம் 9619 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 3; தெற்கு : வரைபட இலக்கம் 931 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2; மேற்கு : வரைபட இலக்கம் 9619 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 1 அத்துடன் ஹோமகம காணிப்பதிவகத்தில் ஜீ. 1647/152, என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1221 இற்கு அமைவான பத்தொன்பது தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 19.5 பே.) விஸ்தீரணத்தைக் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/10

---

**சம்பத் வங்கி PLC**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திள் 4ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி PLC பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர'மானம்

தேவ்மினிவுட்கிராப்ட் சென்டர் - கணக்கு இல. 0069 1000 0908

2007 ஒற்றோபர் 26 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத் தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையி னால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதா வது:-

"கடப்பாடுடையவர்களான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பாதுக்க, கலேகெதர, சமனல மாவத்தையில் இல. 314/2 இல் தேவ்மினி வுட்கிராப்ட் சென்டர் எனும் பெயர் மற்றும் மகுடத்தின் கீழ் பங்காளிகளாக வியாபாரம் நடத்தும் பாதுக்க, பிட்டும்பே, சமகி பெதெஸ,இல. 9/1C இல் வெலேவத்தகே டொன் அமரசேன மற்றும் பாதுக்க, கலேகெதர, சமனல மாவத்தையில் இல. 314/2 இல் அபேசிங்க ஆரச்சிகே டொன் சந்துன் புஷ்ப குமார

மேலும் பாதுக்க, பிட்டும்பே, சமகி பெதெஸ, இல. 9/1C இல் வெலேவத்தகே டொன் அமரசேன ஈடுசெய்தவராக வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற நொத்தாரிசு டபிள்யூ. ஜீ. கே. விஜேதுங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006 மார்ச் 15 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 2742 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளராதலால், 2007 யூன் 06 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள ஐந்து இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து தொளாயிரத்து எண்பத்திமூன்று ரூபா நாற்பது சதம் (ரு. 5,48,983.40) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையானது, சொல்லப்பட்ட ஐந்து இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து தொளாயிரத்து எண்பத்திமூன்று ரூபா நாற்பது சதம் (ரு. 5,48,983.40) ஐ 2007, யூன் 07 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 5,00,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து (15.5%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 2742 கொண்ட சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்ட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளையின் பள்ளேபத்து இல் மஹரகம நகர சபை எல்லையினுள் கொட்டாவ கிராமத்தில் அமைந்த ''சம்புத்தி தெல்கஹவத்த அல்லது பெலென்கஹவத்த'' என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. சீ. பர்னாந்துபுள்ளே அவர்களால் தயாரித்தப்பட்டு 1993 நவெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 438 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் சகலதுடன், மேலும் இந்தக் காணிக்கு சொந்தமான வழி வசதிகள், உரிமைகள் மற்றும் சகல சலுகைகளுடன். மேற்கூறப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன- வடக்கில்: டபிள்யூ. டி. பத்மசேனவின் காணி ; கிழக்கில்: டி. பீ. ஜயசேன உரிமைகோரும் காணி; தெற்கில்: டபிள்யூ. டொன் அமரசேனவின் காணி மற்றும் ரோட் மற்றும்; மேற்கில்: பீ. சோமாவதி பெரேரா உரிமைகோரும் காணி என்பவையாகும். மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடம் இல. 438 இற்கமைய இந்தக்காணி பன்னிரெண்டு தசம் நான்கு ஒன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.41பே.) விஸ்தீரணமுடையது. ஹோமாகம காணி பதிவகத்தில் தொகுதி /பக்கம் G 1298/93 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நில அளவை வரைபடம் இல. 438 இல் விபரிக்கப்பட்ட வழி மேலாகவும் ஊடாகவும் வழி உரிமையுடன்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

கம்பனிச் செயலாளர்.

10-179/12

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(வென்னப்புவ கிளை) – வர்ணகுலசூரிய ஜுட் ஆனந்த பர்னாண்டோ.

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, யூலை மாதம் 23 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''வர்ணகுலசூரிய ஜுட் ஆனந்த பர்னாண்டோ கடப்பாடுடைய வராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. எம். எம். பர்னாண்டோவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட 2228 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்குச் சொல்லப்பட்ட முறி மீது முப்பத்து ஒன்பது இலட்சத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று இருபத்து ஆறு ரூபா ஐம்பத்து ஏழு சதம் (ரூ. 39,09,326.57) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும், உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 2228 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 39,09,326.57 கொண்ட பணத்தொகையை 2009, மாச்சு 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால், பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

வட மேல் மாகாணம், (மாரவில பதிவுப் பிரதேசத்திற்கு உட்பட்டது) புத்தளம் மாவட்டம், பிற்றிகல்கோறள தெற்கு, கம்மால் பற்று, வென்னப்புவ பிரதேச சபையின், வென்னப்புவ உப காரியாலய எல்லைக்கு உட்பட்ட கொலின்ஜதியவில் உள்ள மஹாஎஹருகஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம் உரிமைபெற்ற நிலஅளவையாளர் பீ. டபிள்யூ. பர்ணான்டோவினால் தயாரிக்கப்பட்ட 01.12.1996 ஆந் திகதியிடப்பட்ட 1161 ஆம் இலக்க வரைபடத்தில் விவரமாக விளக்கப்பட்டுள்ளதும், பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான ஆனத்தின் எல்லைகள்- வடக்கு : டக்ளஸ் பர்னாண்டோவின் காணி, மற்றும் அக்னஸ் பர்ணான்டோவினது காணி ; கிழக்கு : நிலஅளவையாளர் பீ. எச். ஈ. மெண்டிசினால் தயாரிக்கப்பட்ட 3768 இலக்க வரைபடத்தின் காணித்துண்டு $4^B$ இன் உப பிரிவின் 4 காணித்துண்டு தெற்கு ஹய் வீதிக்குச் செல்லும் வீ. சி. வீதி; மேற்கு : உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. எச். ஈ. மெண்டிசினால் தயாரிக்கப்பட்ட 3768 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் 2 மற்றும் 3, அத்துடன் மாரவில மாவட்ட

காணிப்பதிவகத்தில் ஜீ. 134/34 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/13

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(காலி கிளை) — மாபொட்டுவான ஜகோடகே டொன் இந்திரஜித் விபூஷண மற்றும் கொஸ்வத்தகே மஞ்சுளா துஷாரி ஜயசிங்க.

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"மாபொட்டுவான ஜகோடகே டொன் இந்திரஜித் விபூஷண மற்றும் கொஸ்வத்தகே மஞ்சுளா துஷாரி ஜயசிங்க கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் காலி பிரசித்த நொத்தாரிசு ஏ.எம். எஸ். மரிக்காரினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, செத்தெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட 10536 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது ஐம்பது இலட்சத்து ஐம்பத்திமூவாயிரத்து ஏழு நூற்றி எழுபது ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 50,053,770.89) சேர்மதியாக உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 10536 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 50,53,770.89 கொண்ட பணத்தொகையை 2009, ஓகத்து 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தளுவத்தவினால், பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்டதும் நான்கு பகுதிகளுக்குள் அடங்குவதுமான கும்பலாவெல்லவீற்கு உட்பட்டதுமான வீரபத்தனகேவத்த என அழைக்கப்படும் காணி, பிரிக்கப்பட்ட காணித்துண்டு ஜீ. யின் உப காணித்துண்டுகளான ஜீ3 யின் காணித்துண்டான ஜீ 3ஏ யின் ஆதனத்துடனான, சகல நிலம், மரங்கள். தோட்டங்கள், மற்றும் எல்லாவற்றினதுமான எல்லைகள் - வடக்கு : அதே காணியைச் சேர்ந்த காணித்துண்டுகளான ஜீ1 மற்றும் எப். ; வடகிழக்கு: மற்றும் ; கிழக்கு: காணித்துண்டுகளான ஜீ 2 மற்றும் வீரபத்தன்னாகேவத்த மறுபெயர், அதே காணியின் ஒரு பகுதி ; தெற்கு: அதே காணியின் காணித்துண்டு ஜீ 3பி ; மேற்கு : வீதி மற்றும் அதே காணியின் காணித்துண்டு ஜீ 1, அத்துடன் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் திரு. டபிள்யூ. ஜீ. டி. யூ. கருணாரட்னவினால், தயாரிக்கப்பட்ட 2005, மாச்சு 8 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1866 இல் காட்டப்பட்டதற்கு அமைவான இருபது தசம் பூஜ்யம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.05பே.) விஸ்தீரணமானதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/12

---

## றுஹுணு அபிவிருத்தி வங்கி - கெகனதுர கிளை

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின் கீழ் றுஹுனு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும்*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் ஸ்ரீ லங்கா மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிக்குரிய அதி விஷேட அரச வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுணு அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் படி,

2008.11.18 ஆந் திகதியில் நடாத்தப்பட்ட றுஹுனு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீரிக்கப்பட்டது:-

"றுஹுனு அபிவிருத்தி வங்கியின் பிரசித்தி பெற்ற சட்டத்தரணியும் நொத்தாரிசு திரு கே. எச். பத்மசிரி அவர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட 2004.11.09 ஆந் திகதிக்குரிய இல 882 என்ற ஈட்டுப்பத்திரத்தின் கீழ், அறவிடப்பட வேண்டியபணம் செலுத்தல், ரத்மலே ஹெல்லகெலே அம்பகஹவத்த கொரடுவ, இல. 220ஏ முகவரியியில் வசிக்கும் வெல்லப்பில ஆரச்சிகே ரோஉறித அபேசேகர என்போர்களினால் செலுத்தாது விடப்பட்டதாலும் அவ்வீட்டுப்பத்திரத்தின் கீழ் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐநூறு ரூபா (ரூபா 2,99,500) றுஹுனு அபிவிருத்தி வங்கிக்கு செலுத்த வேண்டி இருப்பதாகவும் 2008.06.03 ஆந் திகதியில் இருந்து வருடத்திற்கு 24.5% படி இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐநூறு ரூபா (ரூபா 2,99,500) க்கான பணத்துக்காகவும், ஏலவிற்பனை திகதி வரை விற்பனை செலவும் சேர்த்து வேறு ஏதாவது பணம் கிடைக்க இருப்பின்

அவற்றை குறைத்துக்கொண்டும், அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளரான திரு. ஜீ. பீ ஆனன்த என்பவரினால் இலக்கம் 882 ஈட்டுப்பத்திரத்தின் கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது.''

### ஈடு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில், வெல்லபட பத்ததுவையில் பபரெந்தயில் அமைந்துள்ள ஊரலதெனிய இஉறலவத்தையில் பிரித்து வேறாக்கப்பட்ட இல.01 என்ற துண்டும் எல்லையாக வடக்கே: கஹடகஹ ஹேனயும், வயம்ப- அலஹேன்ருப்ப அல்லது வெஹேன தோட்டமும் இதில் இரண்டு றூட் இருபத்தெட்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 28.5பே.) காணியில் அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள் உட்பட அனைத்துமாகும்.

இக் காணிக்கு பம்பரெந்தயில் அமைந்துள்ள ஊரலதெனிய இகலவத்தையை வேறுபடுத்திய இலக்கம் 02 என்ற துண்டும் எல்லையாக- வடக்கே: கொடிதுவக்குகெ ஊேறனயும்; தெற்கே: இக் காணியின் இல. 03 உம்; மேற்கே: இக்காணியின் இல.09 (பாதை) வயம்ப அலஹேன்ருப்ப அல்லது அலஹேன தோட்டம் உட்பட அதில் ஒரு ஏக்கர் ஒரு றூட் பதிமுன்று தசம் ஆறு பூஜ்யம் பேர்ச்சஸ் (1ஏ. 1றூட் 13.60பே.) அனைத்து பயிர்ச்செய்கை, மரங்கள், கட்டிடங்கள் உட்படவாகும். இது மாத்தறை காணிப்பதிவு அலுவலகத்திலே பீ626-11,12 நி. 38-223 கீழ் 2006.12.22 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபை ஆணைப்படி,

சாதாரண அதிகாரி/முகாமையாளர்,
(அமரசேன பிரதாபசிங்ஹ).

றுஹுனு அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
மாத்தறை.

10-16/1

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் (முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்ட) சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல.: 0009 3000 1325 - ஸ்ட்டான்டர்ட் டிரேடிங் கம்பனி (பிரைவெட்) விமிட்டெட்

2009 சனவரி 29ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக 2000 செப்தெம்பர் 26ஆந் திகதியிடப்பட்ட இல. 6009 2190 0517 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டார் என்ற வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 3, சென் அந்தனீஸ் மாவத்தை, இல. 70, லக்கி பிளாசா, 2வது மாடியில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்ட இலங்கையின் கம்பனி சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்ட பெயர் மற்றும் வடிவில் ஸ்ட்டான்டர்ட் டிரேடிங் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் இரண்டு கோடியே பதினாறு இலட்சத்து ஆயிரத்து எண்ணூற்றி முப்பத்தி எட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூபா 2,16,01,838.90) 2008 செப்தெம்பர் 04 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட இரண்டு கோடியே பதினாறு இலட்சத்து ஆயிரத்து எண்ணூற்றி முப்பத்தி எட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூபா 2,16,01,838.90) 2008 செப்தெம்பர் 05 ஆந் திகதி முதல் இல.6009 2190 0517 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடி ரூபா (ரூபா 10,000,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீதம் (13%) மேலும் ஒரு கட்டணமான நாற்பத்தி ஆறு இலட்சம் ரூபா (ரூபா 46,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு வீதம் (12%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்படடிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 6009 2190 0517 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள், கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபதி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

வத்தலை மாபோலை எட்டம்பொலவத்த வீதி இல.105 ஐ ஏற்ற வளவிற்குள் வைக்கப்பட்டுள்ள, வைக்கப்படும் மற்றும் அதன் மீது அல்லது வேறு எந்தவொரு இடத்திற்கு அல்லது இடங்களுக்கு கொண்டு செல்லக்கூடிய மற்றும் அவற்றினும் மற்றும் மீது வைக்கக்கூடிய, களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய அல்லது ஸ்தாபித்து வைக்கக்கூடிய இங்கு கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள அசையும் இயந்திர உபகரணங்கள் இயந்திரக்கூடங்கள் மற்றும் கருவிகளாகியவற்றை வெவ்வேறாக மற்றும் இணைக்கப்பட்டுள்ள அனைத்துமுடன்.

ரீ பெக் கொன்ஸ்ட்டன்ட்டா ரீ பேக்கிங் (Baging) மெஷின்

| | | |
|---|---|---|
| தயாரிப்பு | : | 1680 |
| தொடர் இல | : | ஜார்மனி(1989 தயாரிக்கப்பட்டது) |
| கொள்ளளவு | : | ரீ பேக் இயந்திரம், நிமிடத்தில் கிராம் 1.5 — 2.5 பேக் 150, இலக்ட்ரொனிக் பெனல்போட் மற்றும் கணக்கெடுக்கும் உபகரணம் (டிவைஸ்) அக்ஷன் வீல் உடன் பூரணமான அனலொக் போன்றதொன்று |

கூறப்பட்ட வளவுகளுக்கு கொண்டு வரப்படும் அவற்றில் நிறுவப்படும் அசையும் இயந்திர உபகரணங்கள் மற்றும் காலத்திற்கு காலம், கூறப்பட்ட இயந்திரஉபகரணங்கள், கருவிகள் மற்றும் அவற்றின்

எந்தவொரு பாகத்தையும் அல்லது சில பாகங்களுக்கு பதிலாக சேர்க்கப்படும் அசையும் இயந்தி ரஉபகரணங்களுடனாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

கம்பனி செயலாளர்.

10-179/11

---

## றுஹுனு அபிவிருத்தி வங்கி – கெகனதுர கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின கீழ் றுஹுனு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் ஸ்ரீ லங்கா மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிக்குரிய அதி விசேட அரச வர்த்தமானிப் பத்தரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுனு அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் படி, 2008.11.18 ஆந் திகதியில் நடாத்தப்பட்ட றுஹுனு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழ்க்கண்ட தீர்மாணங்கள் ஏகமனதாக அங்கீரிக்கப்பட்டது:-

‘‘றுஹுனு அபிவிருத்தி வங்கியின் பிரசித்தி பெற்ற சட்டத்தரணியும் நொத்தாரிஸ் திருமதி சரோஜனி விக்ரமசிங்ஹ அவர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட 2004.11.09 ஆந் திகதிக்குரிய இல. 3768 என்ற ஈட்டுப்பத்திரத்தின் கீழ், அறவிடப்பட வேண்டியபணம் செலுத்தல், இல. 22 படுவத்த பெத்தேகம்மெத்த பெரெக்கயில் வசிக்கும் ருவன்பஜர லலித் த சில்வா என்போர்களினால் செலுத்தாது விடப்பட்டதாலும் அவ்வீட்டுப்பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபா (ரூபா 1,12,250) றுஹுணு அபிவிருத்தி வங்கிக்கு செலுத்த வேண்டி இருப்பதாகவும் 2007.07.03 ஆந் திகதியில் இருந்து வருடத்திற்கு 20% படி ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபா (ரூபா 1,12,250) க்கான பணத்துக்காகவும் ஏலவிற்பனை திகதி வரை விற்பனை செலவும் சேர்த்து வேறு ஏதாவது பணம் கிடைக்க இருப்பின் அவற்றை குறைத்துக்கொண்டும், அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளரான திரு ஜீ. பீ. ஆனன்த என்பவரினால் இலக்கம் 3768 ஈட்டுப்பத்திரத்தின் கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது.’’

### ஈடு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகனத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெல்லபட பத்ததுவையில் உடஅபரெக்கயில் அமைந்துள்ள படுவத்த அல்லது மில்லகஉறவத்த ‘‘ஏ’’ எழுத்தைக் கொண்ட காணித்துண்டை அதிகாரம் பெற்ற அளவையாளர் ஏ. எஸ். பிரேமரத்ன ஒழுங்கு செய்த இல. 3767. (1993.10.16) யின் வரைபடத்தின் பிகாரம் வேறுபடுத்திய இல. 22 என்ற துண்டும் வடக்கே: இவ் வரைபடத்தின் இல 23 என்ற துண்டும் பாதைக்காக வேறுபடுத்தி இல 31 எனும் நிலத்துண்டும்; கிழக்கே: இவ் வரைபடத்தின் இல 19 என்ற துண்டும்; தெற்கே: காணியின் ‘‘பீ’’ என்ற துண்டும்; மேற்கே: படுவத்தயும் உள்ள இதில் (0ஏ. 0றூட். 20பே.) காணியில் அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள் உட்பட அனைத்துமாகும்.

இக்காணிக்கு போக்குவரத்து செய்ய வேறுபடுத்திய மேற்குறிப்பிட்ட இல. 31 என்ற துண்டும் பாதைக்காக உபயோகிக்க அதிகாரம் பெற்றுள் ளது.

இன்னும் இக் காணி அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட கே. பி. எஸ். யாபா அவர்களின் 2004.09.14 ஆந் திகதிய இல. 3636 கொண்ட வரைபடத்திற்கிணங்கவும் அவை அளவில் பதினெட்டு தசம் எட்டும் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூட். 18.08பே.) என்ற மிகப்பெரிய காணி யாகும். இக்காணி பீ 503-207, நி 33 -168 கீழ் 2004.11.04 ஆந் திகதி மாத்தறை காணிப் பதிவு அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபை ஆணைப்படி,

சாதரண அதிகாரி/முகாமையாளர்,
(அமரசேன பிரதாபசிங்ஹ).

றுஹுனு அபிவிருத்தி வங்கி
பிரதான அலுவலகம்
மாத்தறை.

10-16/2

---

## இ.அ.நி.கூ.வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட)

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட் டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகினறது:-

"ஹசித்த அக்ரோ கெமிக்கல்ஸ்" என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் உரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற பொலன்னறுவையைச் சேர்ந்த ஹீன்கெந்த முதியான்சலாகே ஆனந்த சமரகூன் என்பவர், இ.அ.நி.கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஏஏ அபேவர்த்தன என்பவரினால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003 செத்தெம்பர் 4 ஆந் தேதிய 131 ஆம் இலக்க முதனிலை ஈட்டுமுறியின்மீதும் 2004, பெப்புருவரி 9ஆந் தேதிய 186ஆம் இலக்க இரண்டாந்நிலை ஈட்டுமுறியின்மீதும் 2005 பெப்புருவரி 9ஆந் தேதிய 303ஆம் இலக்க மூன்றாந்நிலை ஈட்டுமுறியின்மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் மேற்கூறப்பட்ட 131ஆம், 186ஆம் மற்றும் 303ஆம் இலக்க ஈட்டுமுறிகளின்மீது 2009 மே 1 ஆந் தேதியன்றுள்ளவாறாக இருபத்தொரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து முந்நூற்று நாற்பத்தெட்டு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 21,67,348.75) கொண்ட தொகையும் 2009, யூன் 1ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை பதினாறு இலட்சத்து

முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ.16,37,500) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிரல், யூலை. ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8%) வட்டியும் சொல்லப்பட்ட ஹீன்கென்த முதியான்சலாகே ஆனந்த சமரகூன் என்பவரிடமிருந்து இ.அ.நி.கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க இ.அ.நி.கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும். வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்தொரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து முந்நூற்றிநாற்பத்தெட்டு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 21,57,348.75) கொண்ட தொகையை, 2009 யூன் 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை பதினாறு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 16,37,500) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிரல், யூலை. ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 131ஆம், 186ஆம், 303ஆம் இலக்கங்களைக்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ.அ.நி.கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் செல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு எல். பீ. சேனாநாயக்கா அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 131 ஆம், 186 ஆம், 303 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டத்திலுள்ள சிலாபம் பதிவுப் பிரிவினுள் பிட்டிகல் கோறளை வடக்கின் ஆனவிழுந்தான்பத்துவில் ஆராச்சிக்கட்டுவக் கிராமத்தில் அமைந்துள்ளதும், தியகில்மா மற்றும் வட்டவணயாய எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பி. பராக்கிரம என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1979.03.02ஆந் தேதிய 153ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப் பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில்: கிச வீதி; கிழக்கில்: சொல்லப்பட்ட 153ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2; தெற்கில்: அரசுக்குரிய காணி மற்றும்; மேற்கில்: ஒஸ்மன்ட் பர்ணாந்துவின் காணி; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் எல்லாவற்றுடனும் மூன்று ஏக்கர்கள் (3ஏ. 0றூ. 0பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி. கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-57/5

---

### தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2009, யூலை 22 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது :-

"(கடன்பெறுநரான) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பிட்டகோட்டேயில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான கணே அப்பரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி பீல்சீ இன் சார்பில் (வங்கி) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) எஸ். ஏ. கப்புவத்த அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.02.01 ஆந் திகதிய 699 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) எஸ். ஆர். டி. எஸ். வர்ணசூரிய அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.07.09 ஆந் திகதிய 715 ஆம் இலக்க உறுதியின் மீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) ஏ. என். எம். ஹேவாஜுலிகே அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.09.12 ஆந் திகதிய 649 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும் வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

அத்துடன் 2009, யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஐந்து இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து அறுநூற்று முப்பத்தொன்பது ரூபா முப்பத்தைந்து ஐ. நா. டொலர் (ஐ. நா. டொலர் 5,94,639.35) (இலங்கையில் ரூபாவில் ஆறு கோடி எண்பத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து இருநூற்று எண்பத்தைந்து ரூபா முப்பது சதத்துக்குச் சமமான (ரூ. 6,88,58,285.30) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகளின் மீது வங்கிக்கு வருமதியாக வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ்

செயற்பட்டு, சொல்லப்பட்ட 699, 715 மற்றும் 649 ஆம் இலக்க முறிகளினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே பாகம் I இலும் பாகம் II இலும் விபரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட பணத்தொகையான ஐந்து இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து அறுநூற்று முப்பத்தொன்பது ரூபா முப்பத்தைந்து ஐ.நா. டொலர் (ஐ.நா. டொலர் 5,94,639.35) (இலங்கையில் ரூபாவில் ஆறு கோடி எண்பத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து இருநூற்று எண்பத்தைந்து ரூபா முப்பது சதம் (ரூ. 6,88,58,285.30) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், 2009, யூலை 1 ஆந் நாளிலிருந்து விற்பனை திகதிவரை சொல்லப்பட்ட 699 ஆம், 715 ஆம் மற்றும் 649 ஆம் இலக்க முறிகள் மீது -

(I) நான்கு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நாநூற்று அறுபத்து நான்கு தசம் எண்பத்தெட்டு ஐ. நா. டொலர் (ஐ.நா. டொலர் 4,88,464.88) (இலங்கை ரூபாக்களில் ஐந்து கோடி அறுபத்தைந்து இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து நாநூற்று ஐம்பத்தொரு ரூபா ஐம்பத்தாறு சதத்துக்குச் சமமாக (ரூ. 5,65,63,451.56), கொண்ட பிரதான தொகை மீது ஆண்டொன்றுக்குப் பதினைந்து தசம் ஐந்து சதவீத (15.5%) வட்டியையும் ;

(II) பதினாறாயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு தசம் நாற்பத்தேழு ஐ. நா. டொலர் (ஐ. நா. டொலர் 16,887.47) (இலங்கை ரூபாவில் பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐநூற்று நாற்பத்திரண்டு ரூபாவுக்குச் சமமானது (ரூ. 19,55,542), கொண்ட பிரதான தொகை மீது ஆண்டொன்றுக்குப் இருபத்தொன்பது சதவீத (29%) வட்டியையும் ;

(III) எண்பத்தொன்பதாயிரத்து இருநூற்று எண்பத்தேழு ஐநா டொலர் (ஐ.நா டொலர் 89,287) (இலங்கை ரூபாவில் ஒரு கோடியே மூன்று இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஒரு ரூபா எழுபத்து நான்கு சதத்துக்குச் சமமாக (ரூ. 1,03,39,291.74) கொண்ட பிரதான தொகை மீது ஆண்டொன்றுக்குப் ஒன்பது தசம் ஐந்து சதவீத (9.5%) வட்டியையும் ;

அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

**பாகம் I** :

(1) வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்திலுள்ள பிட்டிகல் கோறளைத் தெற்கின் யட்டிகலன் பத்துவில் மாரவிலையில் (ஆனால் மாரவிலைக் காணிப் பதிவகத்தின் பதிவுப் பிரிவினுள்) அமைந்துள்ளவையும், அவற்றின் மீதுள்ள கட்டிடங்களுடனும் எல்லாவற்றுடனும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. ஷெல்ட்டன் சமரதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.02.21 ஆந் திகதிய 3032ஏ ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டவையும், ஹொரகொல்லவத்த மறுபெயர் தெஹிகஹாகல எனவழைக்கப்படும் காணியினதாய் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டவையும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டவையுமான அக்காணித்துண்டு மற்றும் வளவுகள் அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2, பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டம் 1 (20 அடி அகலமான வீதி ஒதுக்கிடம்) ; கிழக்கில் : ஈவ்லின் ரேச்சல் விக்ரமசிங்கவின் அதே காணியின் மீதிப்பாகம் ; தெற்கில் : ஜஸ்டின் மட்டில்டா பெரேராவின் காணி ; மற்றும் மேற்கில் : சிலாபத்திலிருந்து நீர்கொழும்பு வரையிலான பெருவீதி; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 3032ஏ ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளதுடன், மாரவிலைக் காணிப் பதிவகத்தில் கே55/23 என்பதில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

(2) மேற்கூறப்பட்ட மாரவிலையில் அமைந்துள்ளவையும், அவற்றின்மீதுள்ள கட்டிடங்களுடனும் எல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. ஷெல்ட்டன் சமரதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.10.22 ஆந் திகதிய 3032பீ ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவையும், ஹொரகொல்லவத்த மறுபெயர் தெஹிகஹாகல எனவழைக்கப்படுபவையும் சொல்லப்பட்ட காணியினதாய் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டவையும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டவையுமான அக்காணித்துண்டு மற்றும் வளவுகள் அடங்கலும். சொல்லப்பட்ட காணித்துண்டம் 1, பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : சொல் லப்பட்ட 3032ஏ ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட வீதி ஒதுக்கிடத்தின் மீதிப்பாகம் ; கிழக்கில்: ஈவ்லின் ரேச்சல் விக்ரமசிங்கவின் அதே காணியின் மீதிப்பாகம் ; தெற்கில் : சொல்லப்பட்ட 3032ஏ ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 ; மற்றும் மேற்கில் : சிலாபத்திலிருந்து நீர்கொழும்பு வரையிலான பெருவீதி; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 3032பீ ஆம் இலக்க வரைபடத்தின் பூச்சியம் தசம் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 0.9பே.) கொண்டுள்ளதுடன், மாரவிலைக் காணிப் பதிவகத்தில் கே14/7 என்பதில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

நயினாமடுவைச் சேர்ந்த உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. ஷெல்ட்டன் சமரதுங்கவினால் தயாரிக்கப்பட்ட 1998.04.30 ஆந் திகதிய 3032 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், ஹொரகொல்லவத்த மறுபெயர் தெஹிகஹாகல எனவழைக்கப்படும் சொல்லப்பட்ட காணியின் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட 20 அடி அகலமான அவ்வீதி ஒதுக்கிடம் அடங்கலிலும் அதுநெடுகிலும் வீதிவழி மற்றும் பயன்பாட்டு உரிமையுடன் சேர்த்து. ஆனால் சொல்லப்பட்ட 3032பீ ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், மேலே விடயம் 2 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதுமான வரையறுக்கப்பட்ட பாகத்தைத் தவிர்த்து.

(3) வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்திலுள்ள மாரவிலைப் பதிவுப்பிரிவினுள் பிட்டிகல் கோறளைத் தெற்கில் யட்டிகலன் பத்துவிலுள்ள மாரவிலைக் கிராமத்தில் அமைந்துள்ளவையும், அவற்றின் மீதுள்ள கட்டிடங்களுடன் ஹொரகொல்லவத்த மறுபெயர் தெஹிகஹாகல எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. ஷெல்ட்டன் சமரதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.02.08 ஆந் தகிதிய 4656 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவையும் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டவையும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டவையுமான அக்காணித்துண்டு மற்றும் வளவுகள் அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டம் 1 ; கிழக்கில் : ரேச்சல் விக்ரமசிங்கவின் அதே

காணியின் மீதிப்பாகம் ; தெற்கில் : வாடிவீட்டு வளவுகள் ; மற்றும் மேற்கில் : ஜஸ்டின் மட்டில்டா பெரேராவின் காணியும் கணே அப்பரல்ஸ் லிமிட்டெட் தாபனத்தின் காணியும் வளவுகளும்; பரப்பளவில் இது சொல்லப்பட்ட 4565 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தேழு தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 27.60பே.) கொண்டுள்ளதுடன், மாரவிலைக் காணிப் பதிவகத்தில் கே 54/232 என்பதில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

சொல்லப்பட்ட 699 ஆம் இலக்க ஈட்டுமுறிக்கான மற்றும் 715 ஆம் இலக்க முறிக்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதையுரிமையுடன் சேர்த்து. மின்சார வழங்கற் சாதனம், நீர்வழங்கற் சாதனம், தொலைத்தொடர்புச் சாதனம் மற்றும் காற்றுக் காட்டுப்பாட்டுச் சாதனம் என்பனவுட்பட, சொல்லப்பட்ட காணியுடனும் வளவுகளுடனும் இப்போது இணைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட இணைப்புக்கள் பொருத்திகள், சேவைகள், சீராக்கல்கள் என்பன எல்லாவற்றையும் தனித்தனியானவற்றையும் சேர்த்து.

**பாகம் II :**

மேற்கூறப்பட்ட பிட்டகோட்டேயில் தளவத்துகொட வீதி வழியாக அமைந்துள்ளதும், தளவத்துகொட வீதியில் 167 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், அதன்மீதுள்ள பயிர்களுடனும் எல்லாவற்றுடனும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். டி. லியனசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1993.02.13 ஆந் திகதிய 5542 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், கெக்குனுகஹாவத்த மறுபெயர் மடட்டியகஹாவத்த எனவழைக்கப்படும் சொல்லப்பட்ட காணியினதாய் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டொன்று. காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : பாதையும் தளுவத்துகொட வீதியில் 163 ஆம், 159/2 எவ் ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக்கொண்ட வளவுகளும் ; கிழக்கில் : தளவத்துகொட வீதியில் 171 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகள் ; தெற்கில் : தளவத்துகொட வீதியில் 171 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகள் மற்றும் தளவத்துகொட வீதி ; மேற்கில் : தளவத்துகொட வீதி, பாதை மற்றும் தளவத்துகொட வீதியில் 163 ஆம், 159/2 எவ் ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட வளவுகள். பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 5542 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு நூட் பதினாறு தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ.1றூ. 16.20பே.) கொண்டுள்ளது.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

10-152

---

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"ஹிந்தகொல்லவைச் சேர்ந்த பஸ்நாயக்க முதியான்சேலாகே ஷஷிகலா குமாரி மனிக்கே என்பவர், இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட் சார்பில் குருநாகல்லைச் பிரசித்த நொத்தாரிசு எவ். ஜே. சீ. டபிள்யூ. பெரேரா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, மே 06 ஆந் திகதிய 1688 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்மீது, வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளராதலாலும், 2009, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக மூன்று இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து நூற்று பன்னிரண்டு ரூபா எழுபது சதம் (ரூ. 3,69,112.70) கொண்ட தொகையும் 2009, யூன் 01 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (29%) அல்லது வசதிக்கேற்புடையற்பாலதாகக்கூடிய வேறேதேனும் வீத வட்டியும் சொல்லப்பட்ட முறி மீது சொல்லப்பட்ட பஸ்நாயக்க முதியான்சலாகே ஷஷிகலா குமாரி மனிக்கே என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து மூன்று இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து நூற்று பன்னிரண்டு ரூபா எழுபது சதம் (ரூ. 3,69,112.70) கொண்ட தொகையை 2009, யூன் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (29%) அல்லது வசதிக்கேற்புடையற்பாலதாகக்கூடிய வேறேதேனும் வீத வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 1688 ஆம் இலக்கம் கொண்ட மேற்சொல் லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 1688 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள வியூடவில்லி ஹத்பத்துவவின் கந்தஹூய கோறளையில் உயன்தன மற்றும் ஹிந்தகொல்லக் கிராமங்களில் அமைந்துள்ளதும், கல்பொத்தேவத்த மறுபெயர் அன்னாசிகொட்டுவேவத்த எனவழைக்கப்படுவதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில்: 23/83 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்ட காணியின் எஞ்சியுள்ள பாகம் ; கிழக்கில் : 749 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 1சீ ; தெற்கில் : 749 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1பீ மற்றும் ; மேற்கில் : 23/83 ஆம் இலக்க

வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 ; பரப்பளவில் இது உரிமைபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. ஆரியரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 27 ஆந்திகதிய 749 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் ''1ஏ'' எனக் குறித்துக்காட்டப்பட்டு,அதன் மீதுள்ள மரங்களுடனும், பயிர்களுடனும், கட்டிடங்களுடனும், எலலாவற்றுடனும் பதினொன்று தசம் ஒன்பது சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11.9பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி.கூ. வர்ததன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-116/2

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.*

2009.05.05 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்தது:-

பிரசித்த நொத்தாரிசு திருமதி. C. K. W.செனவிரத்ன அத்தாட்சிப்படுத்திய 2003.02.24 திகதியிட்ட முறி இல.6905 ன் பேரில் 'பிரீதி ஒசுசல', கலஹ, வஞ்சாவல, காலி என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி. கோமல நயன பிரஜாபலி பரணவிதாரண என்பவரிடமிருந்து முதலும் 2009.02.24 வரை வட்டியும் எழு இலட்சத்து ஏழு ஆயிரத்து முந்நூற்று எழுபது ரூபா தொண்ணூற்று ஏழு சதங்களும் (ரூ. 7,07,370.97) அத்துடன் நான்கு இலட்சத்து எண்பத்தோராயிரத்து எண்ணூற்று எட்டு ரூபா நாற்பத்தொரு சதங்களில் (ரூ. 4,81,808.41) ஆண்டுக்கு 22.5% வீதத்தில் 2009.02.25 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல.6905 இன் மீது வருமதியாக உள்ள மேற்குப்பிட்ட ஏழு இலட்சத்து ஏழு ஆயிரத்து முந்நூற்று எழுபது ரூபா தொண்ணூற்றேழு சதங்களும் ( ரூ. 7,07,370.97) அத்துடன் 2009.02.25 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்ட வாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 39, வில்பிரெட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. M.H.பத்மானந்த சிறிவர்த்தனவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397ம் அத்தி) 19 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி காலி பஸார் மேற்தரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

தென்மாகாணம் காலி மாவட்டம் தல்பே பற்றுவில் காலி பிரதேச சபை எல்லைகளுள் கலஹயில் அமைந்த இலுக்பிட்டிய எஸ்டற் என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் K. சிறிவர்த்தன தய்ாரித்த 1999.11.14 திகதியிட்ட வரைபடம் இல. 554/1999 அல் (1999.11.12 திகதியிட்ட பிரித்தெடுக்கப்பட்ட வரைபடம் இல். 451/2000) துண்டு 34 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடகிழக்கில்: துண்டு 13 என அடையாளமிட்ட ஒதுக்கப்பட்ட பாதையும்; தென்கிழக்கில்: துண்டு 13 என அடையாள மிட்ட ஒதுக்கப்பட்ட பாதையும்; தென்மேற்கில்: துண்டு 43ஆம்; வடமேற்கில்: துண்டு 35 ஆம் எல்லைகளாகக் கொண்டு பன்னிரெண்டு தசம் எட்டு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. றூ0.பே12.85) விஸ்தீரணமுடையது. இது காலி காணிப்பதிவகத்தில் D 848/92 ல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.554/1999 ல் துண்டுகள் 78,62 மற்றும் 13 மீதான வழி உரிமையும் ஆகும்.

T.V.S.வசந்த,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி
காலி பஸார் மேற்தரக் கிளை.

10-180

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

கிளை: ஹோமாகம - மஹாகொட வித்தானகே சுவர்ணா ஜயசூரிய

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

''மஹாகொட வித்தானகே சுவர்ணா ஜயசூரிய கடற்பாடுடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. சேனநாயக்காவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006 மார்ச் 10 ஆந் திகதியிடப்பட்ட 1694 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளமையாலும் 2009.07.31 ஆந் திகதி அன்று உள்ளவாறான ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்குச் சொல்லப்பட்ட முறி மீது (ரூபா 6,598,596.04) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ம் ஆண்டின் 4 ம் இலக்க, வங்கிகளினால் கடன் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1694 இலக்க முறி மூலம், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும், வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 6,598,596.04 கொண்ட பணத் தொகையை 2009/08/01 ஆம் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகிய வற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எர் தசூலத்த வினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளை, பள்ளே பற்று வில் உள்ள மகரகம நகர சபைக்கு உட்பட்ட பன்னிப்பிற்றியவில் உள்ள மஹாமீகஹவத்த வீதியின் வரிமதிப்பீட்டிலக்கம் 82/2 இல் உள்ள மஹாமீகஹவத்த மறுபெயர் மஹாமீகஹ என அழைக்கப்படும் காணியுடனான கட்டங்கள், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.டீ. வித்தானவினால் தயாரிக்கப்பட்ட 2006 பெப்புருவரி 20 திகதியிடப்பட்ட 1488 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 1 அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணி முழுவதும் அதிலுள்ள மற்றும் எல்லாமும் சேர்ந்த சொல்லப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு: வீதி; கிழக்கு: வரைபட இலக்கம் 628 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 3; தெற்கு: வீதி; மேற்கு: வரைபட இலக்கம் 628 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 1 ஆனது கல்கிசை காணிப் பதிவகத்தில் எம் 2197/260 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இருபது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது மான ஆதனம்.

அத்துடன், முறி இலக்கம் 1694 இன் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைய வீதியின் மீதான பாதையுரிமையையும் கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-216/8

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397ம் அத்தி) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.*

ஜனக மோட்டர்ஸ் நிறுவனத்தின் கடன் பொறுப்புக்களுக்காக ஈடுவைத்த ஆதனம். (திரு.பின்னடுவகே நிஷான் பிரியங்க தி சில்வா மற்றும் திரு.பிரஹக்மன துப்பறிராலலாகே ரைறஸ் பவ்திஸ் ஆகியோரின் பங்குடைமை)

2008.10.16 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகஷும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

பிரசித்த நொத்தாரிசு W.A.S.C. மத்தியு அத்தாட்சிப்படுத்திய 2003.12.15 திகதியிட்ட முறி இல.3664 இன் பேரில் இல. 193B காலிறோட், பேருவளை என்னும் முகவரியைச் சேர்ந்த ஜனக மோட்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து (திரு. பின்னடுவகே நிஷான் பிரியங்க தி சில்வா மற்றும் திரு. பி. ஏ. ஹக்மன துப்பஹிராலலாகே ரைறஸ் பவ்திஸ் ஆகியோரின் பங்குடைமை) கடன் கணக்கின் பேரில் முதலும் 2009.05.20 வரை வட்டியும் அரசாங்க வரிகள் உட்பட ஏனைய கட்டணங்களும் ஏழு இலட்சத்து ஒன்பது ஆயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து ரூபா பத்து சதங்களும் (ரூ. 7,09,375.10) அத்துடன் கடன் மீது ஐந்து இலட்சத்து முப்பத்து மூன்று ஆயிரத்து முந்நூறு ரூபாவில் (ரூ.533,300) ஆண்டுக்கு இருபத்து நான்கு (24%) வீதத்தில் 2009.05.21 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2003.12.15 திகதியிட்ட முறி இல.3664 இன் மீது வருமதியாக கடன் கணக்கு மீது ஏழு இலட்சத்து ஒன்பது ஆயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து ரூபா பத்து சதங்களும் (ரூ. 7,09,375.10) அத்துடன் 2009.05.21 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்ட வாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 55A, தர்மபால மாவத்தை, கொழும்பு 3 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் & சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397ம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பேருவளை கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

**ஈட்டுமுறியில் குறிப்பிட்ட அட்டவணை**

மேல்மாகாணம், களுத்துறை மாவட்டம், தொட்டமுனை தெற்கு களுத்துறை பேருவல் பத்தயில் பேருவளை பரணகடேயில் அமைந்த கந்தேவத்த அல்லது பஹலவத்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் E. D. G. K. பிரேமரத்ன தயாரித்த 1972 செப்தெம்பர் 25 மற்றும் நவெம்பர் 18 மற்றும் 1972 மே 12 திகதியிட்ட வரைபடம் இல. 564ல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: குலய என்பவர் வசிக்கும் பஹலவத்தயும்; கிழக்கில்: உம்மா நாச்சியா வசித்த கந்தவத்தயும்; தெற்கில்: கந்தெவத்தயின் பகுதியும் கபஞ்சி நைதே வசித்த வாதுவவத்தயும்; மேற்கில்: இக்காணியின் துண்டுகள் B மற்றும் C யும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.564 இன் படி ஒரு றூட் இருபத்தொரு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 21பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது களுத்துறை காணிப்பதிவகத்தில் H 174/29 ன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

திரு.D.N.தி சொய்சா,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பேருவளை.

10-181

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கண்டியைச் சேர்ந்த கலபிட்ட கெதர ஜகத் உதயகுமார் என்பவர், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். ஹப்புதந்திரி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, ஏப்பிறல் 10 ஆந் திகதிய 576 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளா ராதலாலும் மேற்கூறப்பட்ட 576 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது 2009, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக நாற்பத்தைந்து இலட்சத்து எண்பத்தையாயிரத்து எழுநூற்று இருபத்தாறு ரூபா எண்பது சதம் (ரூ. 45,85,726.80) கொண்ட தொகையும் 2009, யூன் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 40,00,000) கொண்ட தொகைமீது மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்கள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன்றுக்கு பத்துச் சதவீத (10%) விளிம்பும் அதாவது, (அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீத மளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் விதம் (சளபிவீ) (ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 வீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி பிடித்து வைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம் (மேலேயுள்ள அடிப்படை வீதங்கள் மீளாய்வுக்கு அமைந்தனவாகுமெனப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும்) சொல்லப்பட்ட கலபிட்ட கெதர ஜகத் உதயகுமார் என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து, கொண்ட தொகையும் 2009, யூன் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை நாற்பத்தொன்பது இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து நூற்று பன்னிரண்டு ரூபா ஐந்து சதம் (ரூ. 49,89,112.05) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது நாளன்று மீளாயவும்படும சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபீவீ) ஆண்டொன்றுக்கு ஐந்து சதவீத வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 576 ஆம் இலக்கங்கொண்ட மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**576 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணம், கண்டிப் பட்டினத்தினுள்ளும் மாநகர சபைப் பிரதேசத்தினுள் மாவட்டத்தினுள்ளும் யட்டிநுவரவின் கங்கவட்ட கோறளையில் தொடன்வலவில் மறுபெயர் நுவர-தொடன்வலவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள மரங்களுடனும் பயிர்களுடனும் மண்ணுடனும் எல்லாவற்றுடனும் ஹெலஉட கலல்தொர கும்புர என அழைக்கப்படும் அறியப்படுவதுமான காணியினதாய் (உரிமம் பெற்ற நிலஅளவையாளர் சீ. டீ. ஆதிஹெட்டி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987.08.12 ஆந் திகதிய 979 ஆம் இலக்க வரைபடத்திற்கு குறித்துக்காட்டப்பட்ட காணியாகவுமுள்ளதும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. வீரப்பன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008, மாச்சு, 21 ஆந் திகதி 1530 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டது மான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : அனிவத்தவிலிருந்து அஸ்கிரியவரையிலான வீதியும் (தொடன்வெலச் செல்வழி) கட்டுமான வேலைவடிகாலும் ; கிழக்கில் : வீதி; தெற்கில் : எல மற்றும் ; மேற்கில்: அட்டலஹா கும்புர, 46 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் தொடன்வெலச் செல்வழி ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 1530 ஆம் இலக்க வரை படத்தின்படி இருபத்துநான்கு தசம் பூச்சியம் எட்டுப் எட்டுப் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 24.088பே.) அல்லது 0.060925 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது.

மேலேயுள்ள காணித்துண்டு, இதனகத்துப்பின்னர் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் மீள்நிலஅளவையொன்றாகவுள்ளது.

மத்திய மாகாணம், கண்டிப் பட்டினத்தினுள்ளும் மாநகர சபைப் பிரதேசத்தினுள் மாவட்டத்தினுள்ளும் யட்டிநுவரவின் கங்கவட்ட கோறளையில் தொடன்வலவில் மறுபெயர் நுவர-தொடன்வலவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள மரங்களுடனும் பயிர்களுடனும் மண்ணுடனும் எல்லாவற்றுடனும் ஹெலஉட கலல்தொர கும்புர என அழைக்கப்படும் அறியப்படுவதுமான காணியினதாய் (உரிமம் பெற்ற நிலஅளவையாளர் சீ. டீ. ஆதிஹெட்டி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987.08.12 ஆந் திகதிய 979 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : அனிவத்தவிலிருந்து அஸ்கிரியவரையிலான வீதியும் எலயும்; கிழக்கில் : பாதை ; தெற்கில் : எல மற்றும் ; மேற்கில் : அட்டலஹா

கும்புர ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 979 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தாறு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 26.50பே.) கொண்டுள்ளதுடன், கண்டிக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுளமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ.அ. நி. கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-57/2

---

**செலான் வங்கி ப. வ. க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறியீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 9911-089841-001 (வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகு கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009.08.11 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கந்தானையைச் சேர்ந்த எம்/எஸ். சாம்யங் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் "கடனெடுத்தவர்கள்" என்ற வகையில் செலான் வங்கி ப. வ.க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு டி. பீ. எல். எச். எச். சில்வா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, ஓகத்து 31 ஆந் திகதிய 1262 ஆம் இலக்க மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம். ஈ. எஸ். பீரிஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, செத்தெம்பர் 14 ஆந் திகதிய 2091 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2009, யூலை 07 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது மூன்று இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்பது ஐக்கிய அமெரிக்க டொலர் ஐம்பத்து நான்கு சதம் (யு. எஸ். டொலர் 3,92,869.54) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால், சொல்லப்பட்ட யு. எஸ். டொலர் 3,92,869.54 பணத்தொகையையும் 2009, யூலை 08 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு பன்னிரண்டு தசம் இரண்டு ஐந்து சதவீதப்படி (12.25%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1262, 2091 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப.வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**முதலாம் அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலும், பதிவுப் பிரிவினுள்ளும் அளுத்குறு கோரளையின் ராகம் பத்துவில் நாகொடையில் அமைந்துள்ள "அனியகந்த எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரியவால் தயாரிக்கப்பட்ட 1991, ஓகத்து 27 ஆந் திகதிய 3444 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 34A எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 34A இன் எல்லைகள் - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரியவால் தயாரிக்கப்பட்ட 1986.09.15 ஆந் திகதிய வரைபடம் இல. 2405 இல் துண்டு 86 (வீதிக்கான ஒதுக்கம் 30 அடி அகலம்) ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 2495 இல் துண்டு 87 (வீதிக்கானந ஒதுக்கம் 30 அடி அகலம்) ; தெற்கு : துண்டு 34B மற்றும் அனியகந்த எஸ்டேட்டின் பகுதி (நாகொட குடியேற்றத் திட்டம் PPCo 869) மற்றும் சொல்லப்பட்ட வரைபடம் இல. 2495 இல் துண்டு 35. சொல்லப்பட்ட 3444 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது இரண்டு ஏக்கர் மூன்று றூட் (2ஏ. 3றூ. 0பே.) விஸ்தீரணமுள்ளது.

மேலே சொல்லப்பட்ட 2495 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டுகள் 81, 85, 86, 87 மற்றும் 88 எனக் குறிக்கப்பட்ட வீதி வழிகளின் மேலாகவும் கீழாகவும் ஊடாகவும் வழி உரிமை கொண்டதாக.

**இரண்டாம் அட்டவணை**

| இனம் | விவரம் |
|---|---|
| 17 | ஜெனரேடடர் |
| 18 | ஜிப்சம் வாக்குவம் இயந்திரம் - 3 |
| 19 | கில்ன் - மின்சார 3 |
| 20 | கில்ன் - மின்சார 5 |
| 21 | கில்ன் - மின்சார |
| 22 | கில்ன் - மின்சார |
| 23 | கில்ன் - காஸ் 2 |
| 24 | கில்ன் - காஸ் |
| 25 | போல் மில் - கிளேஸ் |
| 26 | போல் மில் - கிளேஸ் 2 |
| 27 | போல் மில் - கிளேஸ் |
| 28 | போல் மில் |
| 29 | போல் மில் |
| 30 | போல் மில் |
| 31 | போல் மில் - 2 |
| 32 | காஸ் டாங்க் - 3 |

புதிய இயந்திரங்களின் நிரல்

1.25 MTR மினி ரன்னல் கில்ன் (காஸ்)
தன்னியக்க வெப்பக் கட்டுப்பாடு முறைமையுடனான முழுத்தொகுதி டெய்வா - கொக்யொ கம்.லிமிட். யப்பான்

துணைக்கருவிகள்

*A. செண்ட்ரல் ஃபியுகல் ஃபான்*

பிராண்ட் - கியோகுட்டோ
தொடர் இல. : 225279
வேகம் - 2440 RM
மோட்டார்- 1.5 KW
அளவு- 2 1/2

*புளோவர்*

மோட்டார்- 1.5kw
4 போல்
220 வோல்ட்ஸ்
1430 RPM
50HZ, 60HZ
தொடர் இல. - 90128447

*டிரான்ஸ்பர் கார் (2 எண்)*

I. *வேகக் கட்டுப்பாட்ட கியர்*

இனம் - பெல்போனி
வகை - PR 15
விகிதம் - 1:10
தொடர் இல. - F 01012

*கியர் மோட்டார்*

இனம் - ஹிட்டாச்சி
3 பேஸ், N 200 WDGE - BF 50/60
வோல்ட் - 200/220
50-60 HZ
AMPs - 1.1 - 1.0
ஸ்பிறிங்கால் உந்தப்படும் வகை பிரேக்
தொடர் இல. - A 53152

III. *வேகக் கட்டுப்பாட்டு கியர்*

இனம் - ஹிட்டாச்சி
வகை- PR 15
விகிதம் - 1:10
தொடர் இல. - F 01601

*ஜெனரேட்டர்*

இனம் - ஹிட்டாச்சி
3 பேஸ், N 200 WDGE - BF 50/60
Volt - 200/220
50 - 60 HZ
AMPs 1.1 - 1.0
ஸ்பிறிங்கால் உந்தப்படும் வகை பிரேக்
தொடர் இல. - H 43119

C. **3 ஃபேஸ் இன்டக்ஷன் மோட்டர்**
இனம் - ஹிட்டாச்சி
பவர் - 0.75 K. W. 4 Pole
வோல்ட் -220
RPM - 1710
AMPs - 3.3
தொடர் இல. - 83138174

D. **சைலன்ட் புளோவர்**
இனம் - ஹோரய்
வகை- SST B 4-2.2-60 S -4
ஏயர் குவான். - 9M3/Min
ஸ்ரரிக் பிறெஸ் - 680 MMAQ
மோட்டார் பவர் - 2.2 KW
ஃபிறீகுவன்சி - 60HZ
தொடர் இல. - 1390

E. **லெட் ஸ்பைரல் காஸ் சப்ளை யுனிட்**
பவர் - 0.4 KW
தொடர் இல. - 66048
மோட்டார்
3 ஃபேஸ் இடக்ஷன் மோட்டார்
தொடர் இல. - 21TM-563
வகை- Feq.
இனம் - யஸ்காவா எரெக்ட்ரிக் - யப்பான்
Power - 0.4 KW, 6 போல்

2. பெற் காஸ் கில்ன் - டெய்வா - கொக்யோ கம். லிமிட். யப்பான்

3. கில்ன் கார் - 56 எண்

முதலாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட வளவில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட - பொறித்தொகுதி இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-141

---

**மக்கள் வங்கி - மஹவீதிய கிளை (169)**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டடத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 31.07.2009 ஆந் திகதி நடைபெற்ற அவர்களதுகூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"காலி பிரசித்த நொத்தாரிசு ஈசா குணரத்ன என்பவரால் 2008.07.01 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் இலக்கம் 386 மற்றும் காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் 2007.04.24 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் இலக்கம் 1384 என்ற ஈட்டு முறிகளின் பிரகாரம் கொடுப்பனவில் ஹேகோட கமகே கருணாதாஸ, ஹேகொட கமகே பொடிமஹத்தயா, தனுஜா ஹேகொட கமகே என்பவர் தவணை தவறியுள்ளார. ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது பதின்நான்கு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூ. 14,75,000) மற்றும் பதினாறு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு ரூபா இரண்டு சதம் (ரூ. 16,82,196.02) பணம் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால், 2008.09.08 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 24% பதின்நான்கு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூ. 14,75,000) பணம் மற்றும் 2009.05.19 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 19.5% பதினாறு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு ரூபா இரண்டு சதம் (ரூ. 16,82,196.02) பணம்

ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் "29L" 29எல் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து பதின்நான்கு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூ. 14,75,000) மற்றும் பதினாறு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு ரூபா இரண்டு சதம் (ரூ. 16,82,196.02) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் இலக்கம் 386 மற்றும் 1384 என்ற ஈட்டுமுறிகளின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம் காலிப் பெரும் பகுதிக்குள் காலி நகர சபை எல்லைக்குள் பெட்டிபல வத்தயில் அமைந்திருக்கும் வரிப்பண இலக்கம் 09 என்ற விஸோம்தோட்டம் அல்லது விஸ்டேர்தோட்டம் அல்லது அர்மன் தோட்டம் என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். அபவத்த என்பவரால் அளந்து தயாரித்த 2006.03.26 ஆந் திகதிய இலக்கம 1086 என்ற வரைபடத்தின் பிரகாரம் A என்ற துண்டுக்கான எல்லைகள் - வடக்குக்கு : பெட்டகல வத்த குறுக்கு வீதி வரிப்பண இலக்கம் 11 உம் ; கிழக்கிற்கு : பெட்டகல வத்த குறுக்கு வீதியும் ; தெற்கிற்கு : விஸோம்தோட்டம் அல்லது விஸ்டோ தோட்டம் அல்லது ஆமன் தோட்டம் துண்டு இலக்கம 02 உம் ; மேற்கிற்கு : விஸோம்தோட்டம அல்லது விஸ்டோ தோட்டம் துண்டு இலக்கம் 1 இன் 1A என்ற துண்டும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் மூன்று தசம் மூன்று ஒன்பது மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 3.393பே.) விஸ்தீரணம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக்கும கட்டடங்கள் மரம், மட்டைகள், உட்பட அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் A 639/222 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது,

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

9-159

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்**.

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2009 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** *என்பதையும்,* **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2009**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 02.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2009 |
| | | வெள்ளி | 09.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2009 |
| | | வெள்ளி | 16.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2009 |
| | | வெள்ளி | 23.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2009 |
| | | வெள்ளி | 30.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2009 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 06.11.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2009 |
| | | வெள்ளி | 13.11.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.10.2009 |
| | | வெள்ளி | 20.11.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2009 |
| | | வெள்ளி | 27.11.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2009 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 04.12.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.11.2009 |
| | | வெள்ளி | 11.12.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.11.2009 |
| | | வெள்ளி | 18.12.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.12.2009 |
| | | வியாழன் | 24.12.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.12.2009 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.